# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 19 வியாழக்கிழமை 02.02.2023 கதிர் 86


**இது ரகசியம் அல்ல!**

தேர்தலையொட்டி அரசியல் களத்தில்தான் சுவாரஸியம் என்றால், அதிகாரிகள் மட்டத்திலும் அதற்குக் குறைவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அரச அதிகாரிகளை இடமாற்றக்கூடாது என்கிறது ☞2

## காங்கேசன்துறையில் தல்செவன விடுதியோடு சேர்ந்த பகுதியான

# 200 வருட பழமை வாய்ந்த திரிகோண சத்திரம் அமைந்திருந்த இடத்தை உடன் விடுவியுங்கள்



### சிவபூமித் தலைவர் ஆறு திருமுகன் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 02

காங்கேசன்துறையில் அமைந்துள்ள 200 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட சைவ சமயத்தவர்களின் முக்கிய இடமான திரிகோண சத்திரத்தையும் படையினர் உடன் விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான ஆறு. திருமுருகன். ☞2

# வடக்கு - கிழக்கில் படைகளை குறைக்க ஐ.நா. வலியுறுத்து

### அனைத்துக் காணிகளையும் மீளளிக்கவும் பரிநதுரைப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிவில் நடவடிக்கைகளில் அதிகரித்துவரும் படையினரின் வகிபாகம் குறித்துக் கவலை தெரிவித்துள்ள ஐ.நா. இந்த மாகாணங்களில் இருந்து படைகளைக் குறைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மீளாய்வு அறிக்கையில் இந்த விடயம் ☞8

# வலி. வடக்கில் 108 ஏக்கர் காணி படையினரால் நாளை விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.02

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலி.வடக்குப் பகுதியில் படையினர் வசமுள்ள 108 ஏக்கர் நிலப் பகுதி நாளை வெள்ளிக்கிழமை விடுவிக்கப்படவுள்ளது.

இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் வசமிருந்த நிலங்களே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளது.

காணி விடுவிப்பு நிகழ்வு மாலை 3 மணிக்கு பலாலி வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும். யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ☞2

# அரசிடம் மண்டியிடத் தயாரில்லை தீர்வுக்கான போராட்டம் தொடரும்



### வெளியே வந்த வசந்த முதலிகே சூளுரை

ரணில் அரசின் முன் மண்டியிடத் தயாரில்லை. நாட்டு மக்களின் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. எமது போராட்டம் தொடரும்.

- இவ்வாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே சூளுரைத்தார்.

வசந்த முதலிகேவுக்கு எதிராகக் கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட 3 வழக்குகளிலும் அவருக்கு நேற்று பிணை ☞2



# சொல்வதைச் செயலில் காட்ட வேண்டும் ரணில்

### தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் விக்டோரியாவிடம் நேரில் தெரிவிப்பு

சொல்வதைச் செயலில் காட்டும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உங்கள் நல்லுறவைப் பயன்படுத்திக் கூறுங்கள் என இலங்கை வந்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி ☞2

# நள்ளிரவு முதல் மீண்டும் பெற்றோல் விலை அதிகரிப்பு

பெற்றோல் விலை நள்ளிரவு முதல் 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி நிறுவனம் இரண்டும் ஒரே நேரத்தில் இந்த விலை அதிகரிப்பை அறிவித்துள்ளன.

ஒக்டேன் 92 ரக ☞2

## பஸ்ஸுடன் மோதியது மோ.சைக்கிள்

# தாயும் மகனும் பரிதாபச் சாவு!

வாகன விபத்தில் தாயும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தம்புள்ளை - குருநாகல் வீதியில் கொகரெல்ல வைத்தியசாலைக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாயும் மகனும் பயணித்த மோட்டார் ☞2

# ரூ. பல கோடி பொறுமதியான படகுகள் இரும்பிற்கும் விறகிற்குமா விற்பனை?

### ஏலப் பணத்தைச் செலுத்தி திரும்பப் பெற இந்திய மீனவர்கள் தயார்

(ந.லோகதயாளன்)

பல கோடி ரூபா பெறுமதியான எமது படகுகளை இரும்பிற்கும் விறகிற்கும் விற்காமல் அவற்றை எம்மிடமே திரும்ப ஒப்படைத்தால் ஏலப் பணத்தைச் செலுத்தி அவற்றை மீட்டுச் செல்ல நாம் தயாராகவே இருக்கின்றோம். இவ்வாறு கவலையோடு தெரிவித்தார் இராமேஸ்வரம் விசைப் படகு சங்கத் தலைவர் சேசுராயா. தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த அவர் "காலைக்கதிர்" பத்திரிகையிடம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தமது படகுகள் ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம். அரசியல் நோக்கங்களுக்காக இடமாற்றம் பயன்படககூடாது என்பதே அதன் நோக்கம். அதாவது, தனக்கு வேண்டிய ஓர் அதிகாரி ஒரு தேர்தல் மாவட்டத்தில் பொறுப்பில் இருந்தால் அது தனக்குச் சாதகமானது என்று எந்தவொரு அரசியல்வாதியும் எண்ணி வேறொரு இடத்திலிருந்து அதிகாரியை தான் விரும்பும் இடத்திற்கு இடம்மாற்றி அதிகாரப்புறநடத்தையில்ஈடுபடக்கூடாது என்பதே அடிப்படை நோக்கம்.

இந்த விடயம் தேர்தல்கள் திணைக் களத்தால் உன்னிப்பாகக் கவனிக்கப் படும். அப்படி ஓர் அரசியல் இடம்மாற் றம் நடந்தால் அதைத் தடுத்து நிறுத்தும் அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு இருக்கின்றது. இதையொட்டி யாழ்ப்பாணத்தில் ஒரு சுவாரஸிய மான நிகழ்வு நடந்துள்ளது.

வடக்கு மாகாண சபையில் அமைச் சுச் செயலாளர்கள் மட்டத்தில் இடம் மாற்றம் அண்மையில் இடம்பெற்றது. தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் கள் ஆணைக்குழு விடுத்த பின்னரே இந்த இடம்மாற்றம் வழங்கப்பட்டது. மாகாண பிரதம செயலாளர் அலுவல கத்தால் இடம்மாற்றம் வழங்கப்பட்டது. வழக்கம் போல அமைச்சுக்களின் செயலாளர்கள் சங்கீதக் கதிரை போன்று ஒரு கதிரையில் இருந்து அடுத்த கதி ரைக்கு மாற்றப்பட்டார்கள். வெற்றிடத் திற்கு வெளியிலிருந்து வந்த ஒருவர் அமர்த்தப்பட்டார்.

மாகாணக் கல்வி அமைச்சின் செய லாளராக இருந்தவர் ஆர்.வரதீஸ்வரன். இந்த இடம்மாற்றத்தின்போது அவர் மாகாண விவசாய அமைச்சின் செயலா ளராக அடுத்த கதிரைக்கு நகர்த்தப்பட் டார். அவரது இடத்திற்கு இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராக நீண்ட காலம் பதவி வகித்தவரான அ. உமாமகேஸ்வரன் நியமிக்கப்பட்டார். பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி) கதிரைக்கு திருமதி தெய்வேந்திரம் நிய மிக்கப்பட்டார். இவர் கொழும்பில் இருந்து வந்திருந்தார்.

இந்த இடமாற்றங்களை இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியிருந்த தற்கான காரணம், மாகாண அமைச் சுச் செயலாளர்களில் ஒருவராக இருந்த வரான அ.சிவபாலசுந்தரன் யாழ். மாவட்டச் செயலாளராக நியமனம் பெற்றுச் சென்றமைதான். அவர் கொழும்பு அரசின் பதவிக்கு மாறிச் சென்றுவிட்டதால் மாகாணச் செயலர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது. அத னால் இடம்மாற்றங்கள் தவிர்க்கப்பட முடியாதவை ஆகின.

இது எல்லோருக்கும் தெரிந்தது தான். இருந்தாலும் முடியைக் கட்டி மலையை இழுத்துப் பார்க்கும் விளை யாட்டொன்று இருக்கிறதுதானே. அதுபோல தேர்தல் காலத்தில் இந்த இடம்மாற்றம் என்கிற ஒற்றை நூலில் இந்த விடயத்தை இழுத்துப் பார்க்க லாம் என்று செயலாளர் வரதீஸ்வரன் ஆசைப் பட்டிருப்பார் போலும். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான சிவபால சுந்தரனுக்கு (இவரால்தான் இடமாற் றங்களே வரவேண்டியிருந் தது) ஒரு கடிதத்தை எழுதிப் போட்டார். அதில் தேர்தல் காலத்தில் இந்த இட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இது முறையா என்று என்று கேட்டிருந்தார்.

உடனே தெரிவத்தாட்சி அலுவல ரும் மாவட்டச் செயலருமான சிவபால சுந்தரன் "நீங்கள் எப்படி தேர்தல் காலத் தில் இடம்மாற்றம் செய்யலாம்" என்ற பாணியில் மாகாண பிரதம செயலா ளருக்கு ஒரு கடிதத்தைத் தட்டிவிட்டார். அங்கிருந்து எந்தத் தளம்பலும் இல் லாமல் பதில் தெளிவாகத் திரும்பி வந்தது.

எங்கள் செயலாளராக இருந்த சிவ பாலசுந்தரன் (இவர்தான் கேள்வி கேட்டு கடிதம் அனுப்பியவர்) மாவட்டச் செய லராக பதவி உயர்வு பெற்றுச் சென்று விட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரம் பும் வகையில் மாகாணச் செயலாளர் கள் சுழற்சிமுறையில் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதுவொரு அரசி யல் நோக்கம் கருதிய இடம்மாற்றமல்ல. நிர்வாக ரீதியான அவசியம் ஏற்படுமி டத்து இவ்வாறு அதிகாரிகளை இடம் மாற்றம் செய்வதற்கு இடமிருக்கிறது என்று அந்தக் கடிதம் தெரிவித்தது.

இப்போது இடம்மாற்றத்திற்கு கார ணமானவரே, இடம்மாற்றம் ஏன் செய் தீர்கள் என்று கேட்டு, உங்களால்தான் இடம்மாற்றமே என்ற பதிலையும் வாங்கி வைத்துக்கொண்டு இருக்கிறார். இனி இந்த இடம்மாற்றம் செல்லாது என்று கொண்டு ஆணைக்குழுவை நாடுகிறார் களா என்று பார்ப்போம்....!

- இடிமின்னல் -

## 200 வருட பழமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சத்திரத்தை சைவ சமயத்த வர்களிடம் மீண்டும் வழங்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் காவிடம் ஏற்கனவே கோரிக்கை விடுத் தும் இதுவரை அது நிறைவேற்றப்பட வில்லை என்று அவர் கவலை தெரி வித்தார்.

"பழமை வாய்ந்த எமது மடப் பகுதி லேயே இன்று படையினர் தல்செவன என்ற உல்லாச விடுதியை அமைந்துக் களியாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

சைவ சமயத்தவர்களுக்கு மிக முக்கியமான இந்த திரிகோண சத்திரம் 200 ஆண்டுகளிற்கு முனபு கந்தர் மடத்தைச் சேர்ந்த சித்தரால் ஆன்மிக வாதிகள் சூரிய நமஸ்காரம் செய்யத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு ஒரு யாத்திரிகர்கள் தங்கு விடு தியும் இருந்தது.

சத்திரம், விடுதி என்பவற்றோடு இணைந்ததாக சிவபூமி அறக்கட்ட ளைக்குச் சொந்தமாக 106 பரப்புக் காணி உள்ளது. அந்த இடத்திலேயே தற்போது படையினர் தல்செவன விடுதி அமைத்துள்ளனர். சுமார் 35 பரப்புக் காணியே தல்செவன விடுதியின் பயன் பாட்டில் உள்ளன. எஞ்சியவை சுற்றுலா வருபவர்களின் பொழுது போக்கு இடங் களாக உள்ளன.

சமய ரீதியிலான முக்கியத்துவம் கொண்ட எமது நிலம் இன்று களியாட் டத்திற்கும் அசைவ உணவுப் புழக்கத் திற்கும் உள்ளாக்கப்பட்டிருப்பது மிகுந்த கவலை தருகிறது. அதனை எம்மிடம் திருப்பித் தாருங்கள் என நாம் மகிந்த அரசின் காலத்திலும் கேட்டோம், அதன் பின்பு மைத்திரி அரசிலும் முயற்சித் தோம் பயன் ஏதும் கிட்டவில்லை.

இந்தக் காணியை மீள வழங்க வேண்டும் என கடந்த தேசிய பொங்கல் விழாவிற்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிடம் நல்லை ஆதீ னத்தில் வைத்து நேரில் கோரிக்கை விடுத்தோம்.

இன்று எண்ணினாலும் எந்த தடையோ அல்லது நெருக்கடியோ இன்றி உடனடியாக அந்த இடத்தில் 70 பரப்பு காணியைவிட முடியும். அதனை செய்வார்கள் எனக் காத்தி ருக்கின்றோம் – என்றார்.

## அரசிடம் மண்டியிடத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் நீதிமன்ற வளாகத் தில் வைத்து கருத்து வெளியிடுகையலேயே அவர் மேற்கண் டவாறு சூளுரைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக மக்கள் மீது வரிகள் சுமத்தப்பட்டுள்ளன. அரச ஊழி யர்களின் சம்பளப் பிரச்சினை தீர வில்லை. எனவே, இந்த அரசின் முன் மண்டியிட நாம் தயாரில்லை. இது ஆரம்பம் மட்டுமே. மக்கள் சக்தி என்ன வென்பதை விரைவில் காட்டுவோம் – என்றார்.

## வலி. வடக்கில் 108 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைய தினம் விடப்படவுள்ள 108 ஏக்கர் காணிகளில் இராணுவத்தின ரின் பிடியில் இருந்த 80 ஏக்கர் நிலமும் கடற்படையினரின் வசமிருந்த 28 ஏக்கர் நிலங்களும் அடங்கியுள்ளன.

வடக்கின் ஆளுநராக சுரேன் ராக வன் இருந்தபோது உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டு அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்ட காணிகளும் இப்போது விடுவிக்கப்படும் காணிகளுக்குள் அடங்கியுள்ளன.

## சொல்வதைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்டிடம் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் என்ற முறையில் கூறி னோம் – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணே சன் எம்.பி. தெரிவித்தார்.

இதுவே தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஏகோபித்த நிலைப்பாடாக இருந்தது என்று தெரிவித்த மனோ கணேசன் எம்.பி., மேலும் கூறியதாவது:–

இந்த ஜனாதிபதிக்கு எதிரணித் தலைவர் சஜித், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, ஜே.வி.பி. தலைவர் அநுர குமார ஆகியோரது 13 ஆவது திருத்தம் தொடர்பான சாதகமான நிலைப்பாடு இருக்கின்றது. அதைக்கூட அமுல் செய்ய அவர் தயங்குகின்றார்.

வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள், இந்திய வம்சாவளி மலையகக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆகிய மூன்று தரப்பு கள் இப்போது இலங்கை பிரச்சினை தொடர்பில் இருக்கின்றன. இது கடந்த கால சமாதான பேச்சு சூழலின் பின் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஆகும். ஆகவே, இப்போது இந்த மூன்று தரப்புகளுடனும் தனித்தனியாக பேசும்படியும், அதன்பின் சர்வகட்சி மாநாட்டை நடத்தும்படியும், ஜனாதி பதிக்கு ஆலோசனையும் கூறுங்கள் என நான் அவரிடம் கூறினேன்.

இதை அனைத்து தமிழ் பேசும் கட் சிகளும் ஆமோதிக்கிறீர்களா என அமெ ரிக்காவின் அரசியல் விவகாரங்களுக் கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் எம்மிடம் வின வினார். இந்நிலையில் அனைத்து தமிழ் பேசும் கட்சி பிரதிநிதிகளும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்து, அனைவரிட மும் பேசச் சொல்லுங்கள் என்று கூட் டாக விக்டோரியா நூலண்ட்டிடம் தெரி வித்தனர்.

தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்க ளின் இந்த நிலைப்பாடுகளை ஜனாதி பதிக்கு, நாடு திரும்பும் முன் தெரிவிப்ப தாக விக்டோரியா நூலண்ட் எம்மிடம் உறுதியளித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை களைப் படிபடியாக ஆராய்ந்து தீர்வு காணும் செயன்முறை அமுலாக வேண் டும். அதற்கு அமெரிக்கா துணை இருக் கும் என விக்டோரியா நூலண்ட் எம் மிடம் கூறினார் – என்றார்.

## நள்ளிரவு முதல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஐ.ஓ.சி. அறிவித்துள்ளன.

அதன்படி இதுவரை 370 ரூபா வாக விற்பனைசெய்யப்பட்டு வந்த ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற் றரின் புதிய விலை 400 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய எரிபொருட்களின் விலை களில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தாயும் மகனும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிள் வீதியில் கவிழ்ந்து இ.போ.ச. பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளா கியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும், மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

36 வயதான ரத்நாயக்க என்ற நப ரும், 62 வயதான அவரின் தாயா ருமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ள னர்.

(08ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர்
Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்க ளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

# இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்ட ஒழுங்கு விதிகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 02

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகள், 2023.01.01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் என்பவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# விமான பயணங்களின் போதான குற்றங்கள் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த தீர்மானம்

விமானங்களில் பயணிக்கும் போது இடம்பெறுகின்ற குற்றங்கள் மற்றும் ஏனைய செயல்கள் தொடர்பான சமவாயத்தைத் திருத்தம் செய்வதற்கான பணிமுறை விதிக்கோவையை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான மொன்றியல் பணிமுறை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

விமானங்களில் பயணிக்கும் போது இடம்பெறுகின்ற குற்றங்கள் மற்றும் சில ஏனைய செயல்கள் தொடர்பான சமவாயத்தைத் திருத்தம் செய்வதற்கான பணிமுறை விதிக்கோவையின் (மொன்ரியல் பணிமுறை ஒப்பந்தம் - 2014) திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கும், குறித்த பணிமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளை இலங்கையில் நடைமுறைப் படுத்துவதற்கும் ஏற்புடைய வகையிலான சட்ட வகுப்புக்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கெஸ்பேவ பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றின் மேல்மாடியிலிருந்து கீழே வீழ்ந்த இளைஞர் சாவு!

கெஸ்பேவ பிரதேசத்தில் உள்ள மூன்று மாடிகள் கொண்ட ஹோட்டல் ஒன்றின் மேல் தளத்திலிருந்து அதன் ஊழியர் ஒருவர் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என கெஸ்பேவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெனிப்பிட்டிய வரகாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் சுமார் இரண்டரை வருடங்களாக ஹோட்லில் பணிபுரிந்து வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 11 மணியளவில் ஹோட்டல் மூடப்பட்டதாகவும் அதிகாலை 2 மணியளவில் ஹோட்டலின் முன் வீழ்ந்து காணப்பட்ட இளைஞர் இரத்தம் தோய்ந்த நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதை பணியாளர் ஒருவர் கண்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஹோட்டல் உரிமையாளருக்கு அறிவித்ததையடுத்து,களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# வீட்டுக் குழியிலிருந்து துப்பாக்கி மீட்பு

அக்மீமன ஹியர் பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் குழி ஒன்றில் இருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த தோட்டாக்கள் மற்றும் துப்பாக்கிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

இது தவிர கைவிலங்கு, ஒரு கைவிலங்கு உறை, மற்றும் செயலிழக்கச் செய்யப்பட்ட ஆயுதம் ஆகிய வையும் கைப்பற்றப்பட்டன என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தக வலை அடுத்து இவை மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டில் தோண்டி மூடப்பட்ட அடையாளம் காணப்பட்ட இடங்களைத் தோண்டியபோதே உறை ஒன்றில் இடப்பட்டிருந்த நிலையில் இவை கைப் பற்றப்பட்டன.

குறித்த வீட்டின் உரிமையாளர் கொரியாவில் பணிபுரிந்து வருவதோடு, இந்த இடம் அவரால் புதிதாக வாங்கப்பட்டுள்ளமையும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக அனைத்துப் பொருள்களும் அக்மீமன பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மகாலிங்கம் - செல்லப்பாக்கியம்
(கொம்மந்தறை)

அன்னை மடியில்
01.04.1939
இறைவனடியில்
02.02.2022

மண்ணுலகில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து
விண்ணுலகம் சிறக்கச் சென்றவளே...
பூப்போன்ற உன் புன்னகை
மாறாமல் என்றும் எம்மனதில் மணக்குதம்மா...

முத்தாய் பெற்று பாராட்டி சீராட்டி
பார் புகழ உயர்த்திய தெய்வமே...
உன் நினைவலைகளுடன்
எம்மை செதுக்கி வாழ்கின்றோமம்மா.

நவ இரத்தினமாய் எம் அன்னை மடியில் தவண்டு.
பாசமாய் உன் நெஞ்சில் வளர்ந்தோமே...
அந்த காலனும் பொறாமை கொண்டு
தனக்கும் வேண்டும் அந்த பாசம் என்று
உன்னை கூட்டிச் சென்றானோம்மா...

கண் குளிர, மனம் நிறைய கட்டித் தழுவி
வாயாற 'பூட்டி' என கேட்டு பரவசமடைந்தாயே.
அனைத்தும் பெற்றேன் போதும் இப்பிறவி என்று
இறைவனடி. சேவை செய்யச் சென்றவளே...

உன் ஞாபக தடங்களுடன் நகர்ந்தோமே
இவ் ஓராண்டு!!!

- குடும்பத்தினர் -

நந்தவனம், கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் என்ன செய்வார்?

**ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உலகளாவிய கால மதிப்பீடு தொடர்பான குழுவினால் இலங்கை தொடர்பான விடயங்கள் புதன்கிழமை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அங்கு 13 பக்க அறிக்கையை தாக்கல் செய்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஆணையர் இலங்கை அரசு செய்யத் தவறியிருக்கும் பல விடயங்களையும் பட்டியலிட்டிருக்கிறார்.**

**அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நீதித்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது.**

**அதிகாரங்களின் பகிர்வு, மனித உரிமைகளின் முன்னேற்றம், அரச கட்டமைப்புக்களின் சுயாதீனத் தன்மை ஆகியவற்றில் புதிய அரசமைப்பு முக்கியமானது. அதனைப் பொது வெளியில் விவாதிக்கவேண்டும்.**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் நியமனம் திருப்தியாக இல்லை. வெளிப்படைத்தன்மையுடன் இல்லை. பல்லினத் தன்மைத்துவம் அதில் போதாமலுள்ளது. அதன் பணிகளும் திருப்திகரமாக இல்லை.**

**வடக்கு – கிழக்கில் சிவில் நிர்வாகத்தில் படையினர் பங்களிப்பு அதிகரிக்கிறது. அதை அகற்ற, வடக்கு கிழக்கில் படையினரைக் குறைக்க வேண்டும்.**

**சிவில் செயற்பாடுகளில் காணப்படும் இராணுவ ஆதிக்கத்தை முடிவிற்குக்கொண்டுவரவேண்டும்**

**கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துக் காணிகளும் பொதுமக்களிடம் மீளக்கையளிக்கப் படவேண்டும்.**

**2017இல் இணங்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.**

**காணாமல்போனோரைத் தேட செயற்திறன் மிக்க கொள்கையொன்று இன்னமும் தயாரிக்கப்படவில்லை. நபர்களை வலிந்து காணாமலாக்கிய குற்றவாளிகள் பொதுமன்னிப்புக்கோரி விண்ணப்பிக்கத் தடைவிதிக்காமலிருக்கிறது அரசு.**

**இப்படிப் பல விடயங்களையும் 5 வருட கால அவதானிப்புக்களின் அடிப்படையில் அறிக்கைப் படுத்தியிருக்கிறது ஐ.நா.**

**வழக்கமாக ஐ.நா. சொல்வதற்கெல்லாம் ஆமாம் என்று தலையாட்டிவிட்டு பின்னர் அது எதனையும் செய்யாமல்விடுவதுதான் அரச தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் பழக்கம்; வழக்கம். இப்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கியிரும் நிலையில், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதி உதவிக்காகக் காத்திருக்கும் நிலையில், நாணய நிதியம் மனித உரிமைகள் விடயத்தில் கடுமையான நெருக்கடிகளைக் கொடுக்கும் வாய்ப்புள்ள நிலையில், ரணில் என்ன செய்யப் போகிறார். மீண்டும் ஒரு தடவை பன்னாட்டுச் சமூகத்தையும் ஐ.நா. போன்ற அமைப்புக்களையும் ஏமாற்றுவாரா? அவர் அதைச் செய்யமாட்டார் என்று எந்த உத்தரவாதமும் இல்லை.**

# தமிழ்த் தேசியத்தை சிதைக்க என்றும் அனுமதிக்கமுடியாது!

## கே.வி.தவராஜா காட்டம்



தமிழ் தேசியத்தை சிதைப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. தமிழ்த் தேசியத்தை சிதைக்கவிடாது எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும், சட்டத்தரணியுமான கே.வி தவராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

சுமந்திரன் வீட்டுக்குள் வந்து தன்னுடைய நிகழ்ச்சி நிரலை முழுமையாக நிறைவேற்றிவிட்டார். தற்பொழுது ரெலோ, புளொட் ஆகிய இரண்டு கட்சிகளும் வேறு மூன்று கட்சிகளுடன் இணைந்து தனியான ஒரு கூட்டணியை அமைத்துள்ளன.

இலங்கை தமிழரசு கட்சி தனியாக தேர்தலில் போட்டியிட உள்ளது. இந்த கூட்டு எல்லாம் ஒரு தேர்தலை மையப்படுத்தியே முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால்தமிழ்தரப்பில்உள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால் மாத்திரமே தீர்வு தொடர்பில் நாங்கள் சிந்திக்க முடியும். ஆனால் இவ்வாறான நிலையில் தீர்வு பற்றி சிந்திக்க முடியாது.

அத்தோடு செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் பெயரை குறிப்பிட்டு, அதாவது சுமந்திரனின் பெயரை குறிப்பிட்டு வீட்டுக்குள் ஆமை வந்து விட்டது. வீட்டுக்குள் சுமந்திரன் வந்துவிட்டார். அதனால் தான் கூட்டமைப்பு இவ்வாறு இருக்கின்றது என பெயரை கூறி குறிப்பிடுகின்றார்.

ஆனால் சுமந்திரன் அவர்கள் பெயரைக் குறிப்பிடாது தூள் விற்பவர்கள், காட்டி கொடுத்தவர்கள், தலையாட்டியவர்கள் என கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர் துணிவிருந்தால் பெயரைக் குறிப்பிட்டு கூறியிருக்க வேண்டும். ஒருவரைப் பற்றி கூறும் போது அவருடைய பெயரை விழித்து கூறினால் தான் அது அவரை சென்றடையும். ஆனால் சுமந்திரன் யாரையோ கூறுகின்றமை போல் கூறி இருக்கின்றார் ஏன் அவ்வாறு கூறினார் என எனக்கு தெரியவில்லை.

தற்பொழுது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இல்லை. தேர்தலின் பின்னர் மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுபடும் என்று நினைப்பது சாத்தியமில்லாத விடயமாகக் காணப்படுகின்றது.

தேர்தலில் தனித்தனியாக கேட்கும் போதே இவ்வாறு மோதிக் கொள்ளும் அணியினர், தேர்தல் முடிய மீண்டும் வந்து ஒன்று சேர்வார்களா என்ற அச்சம் காணப்படுகின்றது.

எனினும் தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. தமிழ்த் தேசியத்தை சிதைக்கவிடாது எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்க வேண்டும். அதாவது இளைஞர் யுவதிகளிடம் கையளிக்க வேண்டும். அதுவரையாவது தேசியத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எம் அனைவரது கடமையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஊழல் குறிகாட்டி சுட்டெண் மதிப்பீட்டில் பின்னடைவான நிலைமையில் இலங்கை!

ஊழல் குறிகாட்டி சுட்டெணின் பிரகாரம் கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஊழல் மோசடிகள் அதிகளவில் பதிவாகியிருப்பதாக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பால் வருடாந்தம் வெளியிடப்படும் ஊழல் குறிகாட்டி சுட்டெண் உலகளாவிய ரீதியில் ஊழல் நிலைவரத்தை மதிப்பீடு செய்வதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் சுட்டெண்ணாகக் காணப்படுகின்றது. இந்த மதிப்பீட்டில் உலகளாவிய ரீதியிலுள்ள 180 நாடுகள் உள்வாங்கப்படும்.

அந்தவகையில் 'இலங்கையைப் பொறுத்தமட்டில் கொவிட் – 19 வைரஸ் பரவலின் காரணமாக சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவிலான வீழ்ச்சியுடன் இணைந்ததாக சீரற்ற முகாமைத்துவம் மற்றும் ஊழல் என்பவற்றின் விளைவாக நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சீர்குலைந்தது' என்று ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி நாட்டில் நெருக்கடி இன்னமும் தீர்வின்றி தொடரும் நிலையில், இலங்கை மக்களுக்கு அவசியமான முறையான சட்டக்கட்டமைப்பு, தரமான ஆட்சிநிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டுமென சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றனர் எனவும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் 2022 ஆம் ஆண்டில் ஊழல் குறிகாட்டி சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் 100 இற்கு 36 புள்ளிகளைப் பெற்றிருக்கும் இலங்கை, கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு புள்ளியால் பின்னடைவைச் சந்தித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# 3 நாடுகளின் தூதரக கட்டடங்கள் சீராகப் பயன்படுத்தப்படுவதில்லை!

ஆஸ்திரேலியா, சுவீடன், கென்யா ஆகிய நாடுகளில் தூதரகங்கள் செயற்படும் இலங்கை அரசிற்குச் சொந்தமான கட்டடங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தூதரகங்களுக்குப் பணியாளர்களை நியமிப்பதில் ஒவ்வொரு நாடும் பயன்படுத்தும் முறையான அளவுகோல்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச கணக்குக் குழு உத்தரவிட்டிருந்தது.

இருப்பினும் 2021 ஆம் ஆண்டு வரை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் இந்தத் தகவல் வெளிவிவகார அமைச்சின் 2021 ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# 8 ஆயிரம் பேருக்கு சம்பளம் வழங்கினால் நாடு மீண்டும் அதலபாதாளம் செல்லும்!

## வயிர அபேவர்தன எச்சரிக்கை

கொழும்பு, பெப்.02

மக்களின் நம்பிக்கை மீண்டும் அதிகரிக்கும் இந்த சந்தர்ப்பத்தில் 8 ஆயிரம் உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டுமென எதிர்கட்சி எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதன் காரணமாக நாடு மீண்டும் பொருளாதார பாதாளத்தில் விழுவதுடன் சுற்றுலாத்துறையும் பாதிக்கப்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

மேலும், எதிர்காலத்தில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள எடுத்த கடனக்களையும் வங்கிக் கடனை செலுத்த முடியாதவர்களும் கூட கடினமான காலத்தை சந்திக்க நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சுமார் 20 பில்லியன்கள் தேர்தலுக்காக மட்டுமே செலவிடப்படும் என்பதோடு தெரிவு செய்யப்பட்ட 8 ஆயிரம் உறுப்பினர்களுக்கு அதன் பின்னர் மாதாந்தம் சம்பளங்களை வழங்க வேண்டும் என்றார்.

இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும், பொருளாதார நெருக்கடிக்கு மீண்டும் முகங்கொடுக்க முடியாது என்றும் வஜிர அபேவிவர்தன தெரிவித்தார்.



## தலைமைத்துவ நிகழ்சிதிட்டம் வவுனியா பல்கலைக் கழகத்தில்



வவுனியா பல்கலைக்கழகத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கோடு தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்சி திட்டம் அங்குராா்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பங்களிப்போடு வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடம் ஏற்பாடு செய்துள்ள இந்தத் திட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட வதிவிட பிரதிநிதி மலினி கோ்விங், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாதசுந்தரன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ் குமார், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் உட்பட பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.






## சர்வதேச நாணய நிதிய உதவி விரைவில் கிட்டும்!

### அமெரிக்க தூதுவர்



சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான உதவிகள் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் துரிதப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்கவை சந்தித்த போதே அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் வெளிநாடுகளின் நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிதி ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு அரசாங்கம் மக்கள் விரும்பத்தகாத சீர்திருத்தங்களை மேற்கொண்டாலும் ஒரு நாடாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இதனால், சர்வதேச கடன் வழங்குநரிடமிருந்து சாதகமான முடிவுகளையும் நிலையான பொருளாதாரத்தை விரைவில் அடைய முடியும் என்றும் அதற்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## புறம் போக்கும் பண்புகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 255

‘நல்ல பண்புகள் தவறிய பிள்ளைகளைப் பெற்றவர் பேர் சொல்லி வாழ்வதில்லை’ என்ற பாடலின் வரிகளை பதியும் போதும் கனத்த மனத்துடனும் வேதனைகளுடனும்தான் எழுதினேன்.

தங்களது ஆளுமைகளாலோ, சாதுரியங்களாலோ சிங்கள தரப்புகளிடமிருந்து இம்மியளவும் பெற்றுக் கொள்ளாத மிதவாத அரசியல் தலைவர்கள், இளைஞர்களுக்குப் போராட்டம் தான் வழியென உணர்ச்சியூட்டி, படிப்படியாக ஆயுதங்களை அவர்கள் கையில் எடுத்து, பின் மிதவாத அரசியல்வாதிகளையும் பின்தள்ளி, எவர், எவரிடமோ எல்லாம் விடுதலை என்ற பெயரில் அவர்களின் கைகளில் இருந்த ஆயுதங்கள் பேசி, ’துரோகிகள்’ என்று நினைத்தவர்கள் எல்லோரையும் பரலோகம் அனுப்பி, இன்று ஒரு பக்கம் வாள்வெட்டுக் குழுக்கள், தூள் கடத்தும் பேர்வழிகள், எத்தனையோ நாடுகளின் எல்லைகளை சட்டவிரோதமாக கடக்கும் முயற்சிகளில் கைதாகி சிறையில் வாடுபவர்கள், அகதி அந்தஸ்துக் கோரி வெளியேறும் கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டு, மீண்டவர்கள் விசாரணைகளில் இருந்து வெளியேறப் படும் துன்பங்கள் என்பவற்றையெல்லாம் ஊடகங்களில் பார்க்கும்போது ‘நோய் தீர்க்கும் மருந்தினை போன்றவை கற்றவர்தரும் அறிவுரைகள்’ என்றிருந்தும் அவற்றை ‘நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்!’ என எடுத்து தெறிந்து நடந்து, அன்றில் ’ஆறு கரையடங்க நடக்காதது காட்டினை வளம் பெற வைக்க’வில்லையா? எது வென்று கண்ணீர் சொரிவது? விடுதலைப் புலிகள், ரெலோ குழுவை அழிக்க வென்று புறப்பட்டபோது தங்களது பிள்ளைகளாக பார்த்த அவர்களை, தாய்மார்களே கதறி கதறிக் கெஞ்சவும், அடுப்பங்கரையில் தாயின் கையால் உணவு அருந்திக் கொண்டிருந்தவர்களை இழுத்து வந்து முற்றத்திலேயே முடித்து, வாரிச்சென்று கார் டயர்களை போட்டு எரித்ததும், பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். தாங்கள் பலசாலிகளாக இருந்த போது செய்தவை, புளொட், ஈரோஸ் என்று எல்லோரிடமும் இருந்த ‘துரோகிகள்’ பட்டியல், உட்பகை என்பவை ஒவ்வொன்றும் அந்தந்த கால நேரங்களில் பாதிக்கப்பட்டவர்களினால் மட்டுமல்ல, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் காப்பகம் போன்ற அரசியல் சார்பற்ற சர்வதேச நிறுவனங்களால் மனித உரிமை சபைகளின் முன் பதியப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் இந்த இளைஞர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தொடங்கிய எதிர்வினையான ஆயுதப் போரில், அதன் ஆயுத கலாச்சாரத்துக்குள் தவிர்க்க முடியாது அகப்பட்டு, அதிலிருந்து மீள முடியாதவர்களாகி விட்டார்கள் என பச்சாதாபல்பட்டாலும், சர்வதேச நாடுகளின் மனித உரிமை பார்வையாளர்கள் அப்படி கருதுவதில்லை. ஒட்டுமொத்தமாக நடந்தவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது, இவற்றின் போக்குகளினால் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலும் கூடத் தாங்களே தேடிக் கொண்ட வினை என்ற மனோபாங்குதான் அங்கத்துவ நாடுகள் இடையே இனப்படுகொலை என்ற சமர்ப்பணங்களுக்கு எழுக்கிறது என்பது மனித உரிமைச் சபையுடன் ஈடுபடும் புத்திஜீவிகளின் கருத்தும் கூட.



‘தூக்க மருந்தினைப் போன்றவை பெற்றவர் போற்றும் புகழுரைகள்’ என்று நிலத்திலும் புலத்திலும் இருந்து அவர்கள் பெற்ற உற்சாகத்தில், தூங்கி, யதார்த்தத்தைச் சந்தித்து, தங்களது அர்ப்பணிப்புகளுக்காக சிறையில் இருந்து வந்தவர்களைக் கூட தமிழ் சமுதாயம் அரவணைத்து உள்வாங்கி நடத்தியத்தா? போர் வரையும் மீட்பர்களாகவும் கதாநாயகர்களாகவும் தெரிந்த இந்தப் போராளிகள், தங்களது இளமையையும் எதிர்காலத்தையும் அவர்களுக்காக தந்து, தொலைத்து, பின் அதற்காகத் துன்பங்களும் அனுபவித்து வந்து, இனிமேல் என்ன செய்வது என்று புகலிடம் தேடிய போது அவர்களை அறியவும் விரும்பாமல், ஒதுக்கி, தாங்கள் அதில் குளிர்காய்ந்தவர்கள் போரின் பின்னால் இருந்த அரசியல்வாதிகள்.

தமிழ் மக்களின் இந்தப் புறம்போக்கின் பண்பே அவர்கள் வேண்டத்தகாதவர்கள் என்ற பயங்கரவாத முத்திரையைத் தந்தது.

இப்படியான அநீதிகள் எல்லாம் சமுதாயத்தில் நடந்திருக்கின்றனவே என்று கூட அந்தக் காலங்களில் ஏதும் குரல் கொடுக்காமல் எந்தப் பக்கம் சார்ந்திருப்பது வசதி என்று பார்த்து விட்டு, சிங்கள பேரினவாதம் தமிழ் மக்களுக்கு நடத்திய அநீதிகளை மட்டும் அவர்களது தலைவர்களாக எடுத்துக் கூறி, நீதிவான்களாக சர்வதேச சட்டங்களை குறிப்பிடுவது மனித உரிமை சபையில் இனப்படுகொலை என எடுபடப்போகும் சாத்தியமும் குறைவே. அந்தச்சபையில் இந்தக் குற்றச்சாட்டுகளை முக்கியமாக முன்னெடுத்து நடத்திச் செல்பவர்கள் மனித உரிமை பாதுகாப்பு மையம் செஞ்சிலுவை சர்வதேச குழு, சர்வதேச மன்னிப்பு சபை போன்ற அரசியல் கலப்பற்ற நிறுவனங்களே. இவை புரிந்தும் புரியாதல் போல, அரசியல்வாதிகள் தேர்தல் மணியோசை கேட்ட உடனேயே நடப்பவற்றையும் அவர்களது பண்புகளையும் பார்த்தால், தமிழ் மக்கள் இவர்களாலவது பெயர் சொல்லி வாழ முடியுமா என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாகிறது ஆனால் அவர்கள் அந்த மரபுகளையே மீண் டும் மீட்டுகிறார்கள்

### துரோகிகளும் அரசியல் செய்வதா? ஆனால் யார் துரோகி?

நீதிவான் முன் நடந்த சுவையான சம்பவம் பின்னர் நகைச்சுவையாக பல்வேறு விதங்களில் பல்வேறு நாடுகளில் உலாவும் ஒரு கதை. அந்த நீதிபதி தன் முன்வரும் வழக்குகளில் வாதி, பிரதிவாதிகளையும் அவர்களுக்காக வாதாடுபவர்களையும் சிலேடையாகப் பேசுவது வழமை. ஒரு நாள் நீதிபதியின் முன் திருட்டு குற்றச்சாட்டுடன் ஒருவன் நிறுத்தப்பட்ட போது, அவனுக்காக யாரும் முன்னிலையாகவில்லை. நீதிபதி அவனது குற்றச்சாட்டு விவரங்களை சிலேடை படுத்தி, ’இவை எல்லாவற்றையும் பார்த்தால் நீ ஒரு திருடன் தானே!’ என்று நக்கலாகக் கூறி, அவனது குற்ற பத்திரத்தைச் சுருளாக்கி ஒரு பக்கத்தில் தனது கண்ணில் வைத்து, வாதியைப் பார்த்து ”எனக்கு முன்னால் ஒரு திருடன் நிற்கிறானே, என்ன தண்டனை தருவது?” என்று எகத்தாளமாக கேட்க, அதற்கு அந்தத் திருடன் “எந்தப் பக்கத்தில் திருடன்? எனக்கு அங்குதான் தெரிகின்றது!” – என நீதிபதியைப் பார்த்துச் சொன்னான்.

அப்படித்தான் இந்த ‘துரோகி’ என்ற அடையாளப்படுத்தலும். அது யார் கொடுத்த அதிகாரம் என்று புரிவதில்லை. அவை எந்தப் பக்கத்தில் இருந்து பார்க்கப்படுகின்றன என்பதும் புரிவதில்லை. இப்படித் துரோகி என்று குற்றஞ்சாட்டும் போக்கு விடுதலைக் குழுக்கள் இடமிருந்து கை மாறி, இன்று அரசியல்வாதிகளிடையே வீறு நடைபோடுகிறது – இவை எத்தனையோ வர்ணங்களில்.

கலாநிதி ஜெய்சங்கர் விஜயம் செய்த போது, அவருடன் கலந்துரையாட ஒற்றுமையான கருத்தோடு போக விட்டாலும், ஒன்றாகப் போனவர்கள், பின்னர் உடைந்து என்னவெல்லாமோ பிதற்றுகிறார்கள். கூடிப் பிதற்றலன்றி, மேல் எதுவும் செய்ய முடியாதவர்களுக்கு யார் துணை போக விரும்புவர்? தங்களது தேவைக்குதான் இவர்களுக்குத்துணைபோகவிரும்பினாலும், இப்படியானவர்களை நம்பி இராமல், அதற்காகவாவது உதவக் கூடியவர்களைத்தான் தேடி எடுப்பார்கள். பிள்ளையான் ராஜபக்ஷக்களுடைய அனுசரணையோடு, அவர்களுக்கு விசுவாசமாக இருந்தாலும், இந்தியாவின் ‘றோ’ உளவுத்துறை போரின் பின் பிள்ளையானோடு நேரடித் தொடர்புகளை வைத்து, அவர்களைப் பாகிஸ்தான், சீனாவின் ஊடுருவலை கவனிக்கப் பாவித்தது. அவர்கள் அது பிள்ளையான் என தள்ளி வைக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களது பொதுத் தேவை எனக் கருதினாலும், அவர்களது அரசியலுக்காக மற்றவர்கள் பட்டங்கள் சூட்டி, தள்ளி வைத்து, மகுடங்களைத் தாங்கள் சூடிக்கொள்ள ஆசை பட்டு விடுகிறார்கள்.



ஜெய்சங்கருடனான கலந்துரையாடல்களுக்குப் போய் வந்த கஜேந்திரகுமார், தங்களைத் தவிர்ந்த மற்றக் கட்சிகள் எல்லாம் இந்தியாவின் முகவர்கள், ஒட்டுக் குழுக்கள், தமிழ் தேசியத்திற்கு துரோகம் இழைக்கிறார்கள் என்கிறார்.

தமிழரசுக் கட்சியின் சாணக்கியன், சுமந்திரன் கூட போர்க் காலத்திலும் அதன் பின்னும் தங்களோடு இதுவரை பங்காளிகளாக இருந்தவர்களை ஒட்டுக் குழுக்கள் என்றே பேசுகிறார்கள். மாவையையும் ஸ்ரீதரனையும் எப்படிப் பார்ப்பார்கள்?

கூட்டமைப்பின் செல்வம், ஜனா கருணாகரன் போன்றோர் தங்களது முன்னைய பங்காளிகளைப் பற்றி அதே பாணிகளில்தான் ஊடக அறிக்கைகள் தருகிறார்கள். இந்தத் தலைவர்கள் கூறுபவற்றைப் பார்த்தால், ஒரு பகுதி, ஆயுதம் தூக்கியவர்களோ அந்த கலாச்சாரத்தில் ஊறியவர்களோ அரசியல் நடத்த தகுதியானவர்கள் அல்லர் என்கிறது. மற்றவர்களோ ஆயுதம் தூக்கியவர்களுக்குதான் அந்தத் தகுதி இருக்கிறது எனக் கதைகள் அவிழ்கிறார்கள். ஆயின், முன்கூறியபடி இவர்கள் எவருமே போராளிகளாக இருந்து, புனர்வாழ்வு பெற்று, வெளிவந்தவர்களைத் தங்களது அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் கொடுக்கவும் முன் வரவில்லை.

இந்த கோங்களையும், நாட்டில் மக்களும், புலம்பெயரும், அரசியல் ஈடுபாடு உடைய சர்வதேசமும் கவனிக்கப் போவதில்லை, தேர்தலில் வாக்குத்தான் முக்கியம், அதற்காக எதையும் சொல்லிவிட்டு போகலாம் என்ற நோக்கற்றவர்களாக இயங்குகிறார்களா இவர்கள் என்ற சந்தேகம் எழுகிறது.

தமிழ் மக்கள்தான் வெளிச்சம் பெற வேண்டும். எப்படிப் பெறப்போகிறார்கள்? சுதந்திர தினம் வருகிறது. அதுவும் கரி என்றால் என்றாகத்தானே மாறுகிறது?

(வளரும்...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## தாயும் மகனும் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரத்நாயக்க, குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள தனது மனைவியைப் பார்ப்பதற்காகத் தனது தாயுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே விபத்தில் சிக்கியுள்ளார்.

மோட்டார்சைக்கிள்வீதியில்கவிழ்ந்து கொழும்பிலிருந்து ஹொரவப்பத்தானை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸுடன் மோதியுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் இ.போ.ச. பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## வடக்கு - கிழக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உலகளாவிய காலமதிப்பீடு தொடர்பான குழுவினால் இலங்கை தொடர்பான விடயங்கள் புதன்கிழமை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதில் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் 13 பக்க அறிக்கை இலங்கை தொடர்பில் தாக்கல் செய்திருந்தது.

அதில் அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2019ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தால் அரச கட்டமைப்புக்கள் மற்றும் நீதித்துறை என்பவற்றின் நேர்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. அதுமாத்திரமன்றி ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு அவசியமான கூறுகள் புறக்கணிக்கப்பட்டன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை மற்றும் அரசியல் அதிகாரங்களின் பரவலாக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதிலும் புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும். அப்புதிய அரசமைப்பு வரைபை பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். அதனைப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக பொதுவெளியில் விவாதத்துக்கு உட்படுத்தவேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் நியமனத்தின்போது போதியளவிலான வெளிப்படைத்தன்மை, பல்லினத்தன்மை மற்றும் சுயாதீனத்துவம் என்பன பேணப்படாமை குறித்தும், அந்த ஆணைக்குழு மனித உரிமைகள் தொடர்பில்கொண்டிருக்கும்ஆணையை உரியவாறு செயற்படுத்துவதற்குத் தவறியுள்ளமை குறித்தும் ஐ.நா.மனித உரிமைகள் உயர் ஆணையர் கூடுதல் கரிசனை கொண்டிருக்கிறார்.

இலங்கையில் அதிகரித்துவரும் படைமயமாக்கலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்ட அமுலாக்கம், நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் மேலோங்கிவரும் படையினரின் வகிபாகமும் கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

2009ஆம் ஆண்டில் போர் முடிவிற்குக்கொண்டுவரப்பட்டிருப்பினும் இராணுவததினரின் காவல், இராணுவ சோதனைச்சாவடி என்ற ரீதியில் இராணுவப் பிரசன்னம் தொடர்வதுடன் போதைப்பொருள் தொடர்பான சட்ட அமுலாக்கம், விவசாயம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் இர ணுவத்தின் வகிபாகம் அதிகரித்துள்ளது.

சிவில்செயற்பாடுகளில்காணப்படும் இராணுவ ஆதிக்கத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கும், வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துக் காணிகளும் பொதுமக்களிடம் மீளக் கையளிக்கப்படவேண்டும்.

2017ஆம் ஆண்டில் உலகளாவிய கால மதிப்பீடு தொடர்பான குழுவினால் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது 2017 – 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கென தேசிய ரீதியான மனித உரிமைகள் செயற்திட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. அச்செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையின் பாதுகாப்புப்படையினரால் நிகழ்த்தப்பட்ட கடத்தல்கள், சட்டவிரோத தடுத்துவைப்புகள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் என்பன குறித்தும் பொலிஸ் காவலின்கீழ் இடம்பெறும் தொடர் இறப்புக்கள் குறித்தும் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை காணாமல்போனோரைத் தேடுவதற்கு அவசியமான செயற்திறன்மிக்க கொள்கையொன்று இன்னமும் தயாரிக்கப்படாமை தொடர்பில் உயர் ஆணையர் கவலை அடைந்துள்ளார் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான சட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள்மற்றும்சாட்சிகளுக்கானபாதுகாப்பு, இழப்பீடு பெறுவதற்கான உரிமை, வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பொதுமன்னிப்புக்கோரி விண்ணப்பிக்கத் தடைவிதித்தல் ஆகியவற்றுக்கான சரத்துக்களை உள்ளடக்கி திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் – என்றுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரணான நடத்தைகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தொடர் பயன்பாடு, தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு உள்ளடங்கலாக நீதித்துறை மற்றும் சட்டத்தின் ஆட்சியில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அந்த நீண்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ரூ. பல கோடி பொறுமதியான படகுகள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான வழக்குக்களுக்காக அவரும் அவரோடு இணைந்து படகுகளின் உரிமையாளர்களும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் ஒவ்வொன்றும் இந்திய நாணய மதிப்பிலேயே 40 லட்சம் முதல் 70 லட்சம் ரூபா பெறுமதியானவை. இலங்கை மதிப்பில் 1 முதல் 2 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி உடையவை. ஆனால் இங்கு ஏற்கனவே விற்கப்பட்ட படகுகள் அனைத்தினதும் ஒட்டு மொத்த விலையே இலங்கைப் பெறுமதியில் சில லட்சங்களைத் தாண்டவில்லை என்று அறிந்தோம். இது பெரும் அநியாயம்.

அந்தப் படகுகள் எமக்குக் கிடைக்கவில்லை என்றால் இங்குள்ள மீனவர்களுக்காவது வழங்கப்பட்டு அவர்கள் பயன்படுத்தியிருந்தால்கூட நாம் நிம்மதியடைந்திருப்போம். ஆனால் ஏலம் எடுத்தவர்களாக் அவை விறகுக்கும், இரும்பிற்குமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள படகுகளுக்கும் அந்த நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்கா கவே நாம் யாழ்ப்பாணம் வந்திருக்கின் றோம். எமது தரப்பு வாதத்தை நீதிமன்றத்தில் முன்வைத்திருக்கின்றோம். நல்லதே நடக்கும் என்று எதிர்பார்க்கின் றோம் – என்றார்






நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 18 புதன்கிழமை 01.02.2023 கதிர் 337

## வர்த்தகர் ஒருவர் வெட்டிக்கொலை

### கொழும்பில் பயங்கரம்

கொழும்பில் வர்த்தகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பஸ்தரான குறித்த வர்த்தகர் சிறிய வாள் ஒன்றால் நேற்று மாலை வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 2

## மட்டு. பாலமீன்மடுவில் படகு கவிழ்ந்து விபத்து!

### மீன்பிடிக்கச் சென்ற ஒருவரைக் காணோம்



(பழுவூரான்)

மட்டக்களப்பு பாலமீன்மடு முகத்துவார கடற்பரப்பில் படகு கவிழ்ந்ததில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ள நிலையில், இருவர் உயிர்தப்பியுள்ளனர். சீரற்ற காலநிலை காரண மாக கடல் கொந் தளிப்பாகக் காணப்படுகின்றது. இதனால் கடலுக் குச் செல்லவேண்டாம் என்று கடற்றொழில் 2



## பிணையில் வந்தார் வசந்த

விளக்கமறியலில் வைக் கப்பட்டிருந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் 8

# மார்ச் 9 நிச்சயம் தேர்தல்!

### அமெ. செயலரிடம் ரணில் உறுதியளிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நிச்சயம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி யளித்துள்ளார். இன்று காலை தன்னைச் சந்தி த்த அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட்டிடம் அவர் இந்த உறுதி மொழியை வழங்கி யுள்ளார். 2





## 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவேன்

### அமெரிக்காவிடமும் ரணில் உறுதி

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தியே தீருவேன் என்று அமெரிக்காவிடமும் உறுதி யளித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 2

## மிலிந்த – ஜெய்சங்கர் நேற்று சந்தித்து பேச்சு



இந்தியாவிற்கான சிறிலங்கா உயர் ஆணையர் மிலிந்த மொரகொட, இந்திய அயலுறவுத் அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை நேற்று புதுடில்லியில் சந்தித்துக் கலந்துரையாடினார். 2

## இந்தியப் படகுகள் வழக்கு மார்ச் மாதத்துக்கு ஒத்திவைப்பு

இலங்கை கடற்படையின ரால் கைப்பற்றப்பட்ட நான்கு இந்திய மீனவர்களின் படகுகள் தொடர்பான வழக்குகள் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு கட் டளைக்காக தவணை இடப் பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்த குற்றச் சாட்டில் இலங்கை கடற்படை யினரால் கைப்பற்றப்பட்ட நான்கு படகுகளின் உரிமை தொடர்பான வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதிவான் ம ன்றில் நீதவான் ஜெ.கஜநிதி பாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற படகுகளின் உரிமை யாளர்களும் 8

## 2 பெண்களின் சடலங்கள் மீட்பு

வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த இரண்டு பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

காலி, எல்பிட்டிய பிரதேசத் தில் உள்ள வீடொன்றிலேயே இந்தச் சடலங்கள் மீட்கப்பட் டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 8

## சிங்களவர்களுக்கும் பெப். 4 ஒரு கரிநாளே

### பசுமை இயக்கத் தலைவர் தெரிவிப்பு

இலங்கையின் சுதந்திர தி னம் என்பது சிங்கள தேசத் திற்கும் ஒரு கரிநாளே என்று தெரிவித்தார் பசுமை இயக்கத் தின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் 8


## வரிக் கொள்கையை கண்டித்து யாழ். பல்கலையில் போராட்டம்

### ஆசிரியர் சங்கத்தினர் திரண்டு குரல்



இலங்கை அரசின் புதிய வரிக் கொள்கையை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் இன்று காலை கவனயீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர். 8

## அம்பாறையில் கடும் குளிர் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(ஏ.எல்.எம். ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதோடு குளிரான கால நிலை காரணமாக பொது மக்களின் இயல்பு 8

## மார்ச் 9......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பகல் தன்னைச் சந்தித்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களிடம் நூலண்ட் இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தார்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று காலை இலங்கையை வந்தடைந்தார் நூலண்ட் அம்மையார். அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளரான அவர், வந்த கையுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசினார். பின்னர், தமிழ் – முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களை ஒன்றாகச் சந்தித்தார்.

கொழும்பிலுள்ள நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியுதீன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் காணிப் பிரச்சினை, அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்கள் பற்றி நூலண்ட் அம்மையாருடன் கலந்துரையாடினோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எவ்வாறு அமெரிக்கா உதவலாம் என்பது குறித்தும், அதிகார பகிர்வு, நல்லிணக்கம் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக மனோ கணேசன் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் பங்கேற்றார்.

## வர்த்தகர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்கிஸை பிரதேசத்தில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம், களுபோவில வைத்தியசாலையில் உடல்கூறுபரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## மட்டு.பாலமீன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளத் திணைக்களம் அறிவித்திருந்தது. இதற்கு நடுவேயும், வறுமை காரணமாக நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு முகத்துவாரத்திலிருந்து மூவர் கடலுக்கு

மீன்பிடிச்சென்றுள்ளனர். அவர்களின் படகே கடும் அலையில் சிக்கிக் கவிழ்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை கடலுக்கு சென்று மீண்டும் இன்று அதிகாலை வரும்போது கடல் குழப்பம் காரணமாக படகு கவிழ்ந்ததாக உயிர் தப்பி வந்தவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் இருவரும் நீந்திக் கரை சேர்ந்தனர்.

காணாமல்போனவர் திராய்மடு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான இருதயநாதன் அந்தோனி (வயது –41). நேற்றைய தினம் அவரது பிறந்த நாள் எனக் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு,கொக்குவில் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

## 13ஐ ......

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்டுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

நாடு எதிர்நோக்கும் மிகவும் கடினமான சூழ்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கு இதன்போது ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார் என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையை வழமை நிலைக்குக் கொண்டு வரு வதற்கான முயற்சிகளுக்கு தமது அரசு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்டோ ரியா நூலண்ட் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், எழுந்துள்ள பிரச்சினைகளுக்கான அவசர தீர்வுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என விக்டோரியா நூலாண்ட் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது உட்பட அது தொடர்பில் சிறிய கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அதிகரித்து வரும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. அமெரிக்கா அதற்கு தனது முழு ஆதரவையும் வழங்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழும்பகே, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மிலிந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் இருதரப்பு உறவுகள் மற்றும் தற்போதைய அரசியல் நிலை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது ஜெய்சங்கரின் சமீபத்திய சிறிலங்காவிற்கான பயணத்தின் அடைவுகளை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி 20ஆம் திகதி சிறிலங்காவிற்குப் பயணம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கைத் தலைவர்களிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பு "மிகவும் பயனுள்ளதாக" அமைந்திருந்தது என்று அமைச்சர் ஜெய்சங்கர் தனது கீச்சகப் பக்கத்தில் பதிந்திருந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC Sampath Bank COMMERCIAL BANK HNB

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஊருக்குத்தான் உபதேசமா?

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்து நீடிக்கின்ற போதிலும், அரச செலவுகளைக் குறைக்கச் சொல்லி ஜனாதிபதி தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்ற போதும், அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் அலுவலகங்களுக்கும் அவர்கள் வசம் உள்ள அமைச்சுகளுக்கும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவில் எந்தவித வெட்டும் இல்லை என்று கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

திறைசேரி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் அலுவலகங்களுக்கும் அமைச்சுகளுக்கும் 2023இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி 2022 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் அளவுக்கு அல்லது அதனிலும் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகின்றது.

இந்த ஆண்டு அரச தலைவரின் செலவுகளுக்கென 3.88 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2022 இல் இந்த ஒதுக்கீடு 3.04 பில்லியனாகக் காணப்பட்டது. அரச தலைவரின் விசேட கொடுப்பனவுகளுக்காக 7 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடமும் இதே தொகை ஒதுக்கப்பட்டது.

2023 இல் அரச தலைவரின் உள்நாட்டு வெளிநாட்டு பயணங்களுக்காக 86 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது, 2022இல் இந்த தொகை 26 பில்லியனாக இருந்தது – என்று அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

அரசு தனது அதிகாரிகளையும் அலுவலகங்களையும் செலவுகளைக் குறைக்கும்படி திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றது. அரச அலுவலர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கு கட்டுப்பாடுகள் வந்துள்ளன. அதிகாரிகளின் வாகனப் பாவனைக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்கள் அன்றாடம் பொதுமக்களுடன் தொடர்புடைய காரியங்களை ஆற்றுபவர்கள். அவர்களின் பணிகள் அன்றாடம் முடிக்கப்பட வேண்டியவை. அப்படியிருந்தும் அங்கு செலவுகளைக் குறைப்பதற்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அரச செலவுகளைக் குறைக்கும் உத்திகளில் ஒன்றாக அரச ஊழியர்களை இந்த ஆண்டு தை மாதம் முதலாம் திகதியுடன் 60 வயதில் ஒய்வு கொடுத்து அனுப்பியது இந்த அரசு. அண்மையில் சுதந்திர தினத்திற்கான செலவுகள் குறித்து எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்ததும் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவிற்குச் செலவுகளைக் குறைக்கும்படி அரச தலைவர் அறிவுறுத்தியிருந்தார்.

இப்படி பொதுமக்களுக்குச் நாளாந்தம் சேவையாற்றும் அரச அதிகாரிகளின் செலவுகளைக் கட்டுப்படுத்திய அரசியல்வாதிகள் அவர்களுக்கான ஒதுக்கீடுகளை மட்டும் முழுமையாக வைத்திருப்பதன் நோக்கம் என்ன?

தலைவன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பார்கள். அப்படியானால் செலவுகளைக் குறைப்பதற்கான முன் உதாரணமாகத் திகழ வேண்டியவர்கள் அரச தலைவரும் தலைமை அமைச்சரும் அல்லவா? தமது அலுவலகங்களுக்கும் அமைச்சுக்களுக்குமான செலவுகளை அரைவாசியாக வெட்டிக் குறைத்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அவர்கள் இருந்திருக்கவேண்டுமல்லவா? அதைவிடுத்து என்னுடைய பவிசுகள், சொகுசுகளில் எந்தவிதக் குறையும் வந்துவிடக்கூடாது, ஆனால் மற்றைய எல்லோரும் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி பணத்தை மிச்சம் பிடிக்கவேண்டும் என்றால் அது நடக்கிற காரியமா?

ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி என்பதைப் போன்று அரசியல் தலைவர்கள் செயற்படும் வரையில் இங்கு எதுவும் மாறப்போவதில்லை.

# திருத்தம் 13ஐ எதிர்த்து தனித்தேனும் போராடுவேன்!



## சரத் வீரசேகர விடாப்பிடி

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக தனித்தேனும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கிடையாது. நாட்டின் ஒருமைப்பாடுக்கும், இனநல்லிணக்கத்துக்கும் பாதிப்பு ஏற்படும் செயற்பாடுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி கூறுவது தொடர்பில் வினவியபோது சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருட கால யுத்தத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாதவற்றை பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெற்றுக்கொள்ள தமிழ்த் தலைவர்கள் முயற்சிக்கிறார்கள்.

நாட்டு மீது உண்மையான பற்று காணப்படுமாயின் கூட்டமைப்பினர் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளைத் தாராளமாகப் பெற்றுக் கொடுக்கலாம். அதேநேரம் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளுக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தலைவர்களும் புலம்பெயர் தமிழ் அமைப்பினரும் ஜனாதிபதிக்குக் கடும் அழுத்தம் கொடுக்கின்றனர். எந்தக் காரணத்துக்காகவும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இடமளிக்க முடியாது. இதை ஜனாதிபதி தலைமையில் அண்மையில் கூட்டிய சர்வகட்சி கூட்டத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கிடையாது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தல் உரிமையைத் தமிழ்த் தலைவர்கள் பாதுகாக்கவில்லை. மாகாண சபை தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது அரசியல் இலாபத்துக்காக மாகாண சபைத் தேர்தலை பிற்போட நல்லாட்சி அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள்.

அரசியல் தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இல்லாதொழித்துள்ளார்கள். அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சில் ஈடுபட்டால்; அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு வலுவற்றதாகி விடும் எனக் குறிப்பிடும் தமிழ்த் தலைவர்கள் கொழும்பில் இருந்துகொண்டு அரசவரப்பிரசாதங்களை முழுமையாக அனுபவிக்கிறார்கள். தமிழ் மக்கள் உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு நாம் தடையாக இருக்கப் போவதில்லை. ஆனால் நாட்டின் ஒருமைப்பாட்டையும், இன நல்லிணக்கத்தையும் சீர்குலைக்கும் வகையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும்போது அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்க முடியாது, 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகத் தனித்தேனும் போராட்டத்தில் ஈடுபடுவேன்.– என்றார்.



# சமூகத்தில் நலிவடைந்தவர்களை வலுப்படுத்தக் கலந்துரையாடல்!

சமூகத்தில் நலிவடைந்தவர்களை வலுப்படுத்துவதற்கான வைகறை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில், கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், 2023 ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களான

மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்

குடும்பங்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன், சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள பயர் மட் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் பரத் சுந்தர், பயர் மட் நிறுவனத்தின் இணைப்பாளர் வைத்தியர் நயனி சூரியாராச்சி, மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.நிக்கொலஸ்பிள்ளை, உதவி மாவட்ட செயலாளர் எஸ்.சி.என்.கமலராஜன் மற்றும் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உள்ளிட்ட பலர் இதன்



## உள்நாட்டு கலவரங்களை அடுத்து

# பிரேசிலின் முன்னாள் அதிபர் அமெரிக்காவில் தங்க முயற்சி

பிரேசிலின் முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ ஆறு மாத காலம் அமெரிக்காவில் தங்கியிருப்பதற்காக 6 மாத கால நுழைவிசைவுக்கு (விசா) விண்ணப்பித்துள்ளார்.

பிரேசிலில் அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் அதிபர் போல்சனரோ தோல்வியடைந்தார். லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா வெற்றி பெற்றுப் புதிய அதிபரானார். ஆனால், வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

ஜனவரி 8ஆம் திகதி அவரது ஆதரவாளர்கள் நாடாளுமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் கட்டடங்களில் நுழைந்து அங்கு சேதம் விளைவித்தனர். இதனையடுத்து அந்தப் பகுதியே போர்க்களமாகக் காட்சியளித்தது. இதனையடுத்து, தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை போலீஸார் அப்புறப்படுத்தினர். கலவரத்தில் ஈடுபட்டதாக 200க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கலவரத்தை தூண்டினார் என்று போல்சனேரோ மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த பிரேசில் அரசு உத்தரவிட்டது. தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தாலும் போல்சனேரோ திடீரென அமெரிக்காவுக்குச் சென்றார்.

தற்போது ஆறு மாத காலம் அமெரிக்காவில் தங்கியிருக்கசுற்றுலாவிசாவிற்குவிண்ணப்பித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னாள் அதிபர் தனது வாழ்நாளில் 34 ஆண்டுகளை பொது சேவைக்காக அர்ப்பணித்துள்ளார். அவர் சிறிது ஓய்வு எடுக்க விரும்புகிறார் என்று இது குறித்து போல்சனோராவின் வழக்கறிஞர் அலெக்ஸ் ஸாண்ட்ரா தெரிவித்தார்.

## அமெரிக்க கறுப்பின இளைஞன் சாவில்

# ஏழு பொலிஸார் மீது கொலை வழக்கு பதிவு

அமெரிக்காவில் கறுப்பின இளைஞர் கொல்லப்பட்ட வழக்கில் 7 பொலிஸார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர், 3 தீயணைப்பு வீரர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டென்னசே மாகாணத்தை சேர்ந்த மெம்பிஸ் நகரில் டைரே நிக்கோலஸ் (வயது 29) என்ற கருப்பின இளைஞர் கடந்த 7ஆம் திகதி தனது காரை வீட்டிலிருந்து தாறுமாறாக ஓட்டிச்சென்றுள்ளார். அவரது வாகனத்தை வழிமறித்து நிறுத்திய போலீஸார் டைரே நிக்கோலஸை கண்மூடித்தனமாக தாக்கினர். முகத்தில் மிளகு ஸ்பிரே அடித்தனர். வீட்டுக்கு தப்பியோட முயன்ற இளைஞரை விரட்டிப்பிடித்து, தீயணைப்பு படையினர் உதவியுடன் மருத்துவமனையில் சேர்த்தனர். 3ஆவது நாளில் அந்த நபர் இறந்தார்.

இச்சம்பவத்துக்கு அமெரிக்காவில் கடும் கண்டனம் எழுந்தது. இதையடுத்து சம்பவம் குறித்து விசாரணை நடத்திய மெம்பிஸ் பொலீஸ் நிர்வாகம், இந்த தாக்குதலில் தொடர்புடைய 7 பொலீஸாரையும் பணியிடை நீக்கம் செய்துள்ளது. இவர்களில் 5 பேர் கறுப்பினத்தவர்கள். இவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட டைரே நிக்கோலஸின் உடல் நிலையை மதிப்பீடு செய்து போதிய மருத்துவ உதவிகளை வழங்காத காரணத்துக்காக தீயணைப்பு வீரர்கள் 3 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மோசமான குற்றங்களில் ஈடு படும் நபர்களை விரட்டிப்பிடிக்க 'ஸ்கார்பியன்ஸ்' என்ற பெயரில் அதிரடிப்படையை மெம்பிஸ் காவல்துறை 2021ஆம் ஆண்டு உருவாக்கியது. இந்தப் படையைச் சேர்ந்தவர்கள்தான் நிக்கோலஸ் மீது தாக்குதல் நடத்தினர். இந்தப் படை தற்போது கடும் கண்டனத்துக்கு ஆளாகியதால், ஸ்கார்பியன் படையை நிரந்தரமாக கலைப்பதாக மெம்பிஸ் காவல் துறை அறிவித்துள்ளது.



# பாக். மசூதி மீதான தாக்குதலில் இறந்தோர் தொகை அதிகரிப்பு

## 100 ஐ எட்டியதாக அதிகாரிகள் அறிவிப்பு

பாகிஸ்தானின் மசூதி மீது நடந்த தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 100ஐ எட்டியுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்கவா மாகாணத் தலைநகர் பொவரில் பாதுகாப்பு மிகுந்த போலீஸ் லைன்ஸ் பகுதி உள்ளது. இங்குள்ள ஒரு மசூதியில் நேற்றுமுன்தினம் மதியம் தொழுகையின்போது குண்டு வெடித்தது.

தொழுகையை இமாம் தொடங்கிய அடுத்த சில வினாடிகளில் முதல் வரிசையில் இருந்த ஒருவர் தனது உடலில் பொருத்தியிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச்செய்தார் என்று பொலிஸார் கூறுகின்றனர். மதியம் 1.40 மணிக்கு நிகழ்ந்த இந்த குண்டுவெடிப்பில் மசூதியின் கூரை இடிந்து, தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது விழுந்தது. இதையடுத்து அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

தொடர்ந்து பலரது உடல்கள் மீட்கப்பட்டதாலும் சிகிச்சை பலனின்றி பலர் இறந்ததாலும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இந்நிலையில் குண்டுவெடிப்பால் இதுவரை 100 பேர் இறந்துள்ளனர் எனவும் 221 பேர் காயம் அடைந்துள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தாமே நடத்தினர் என்று தலிபான்கள் உரிமை கோரியுள்ளனர்.

குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக கருதப்படும் தற்கொலைப் படை தீவிரவாதியின் துண்டிக்கப்பட்ட தலையை அதிகாரிகள் நேற்று மீட்டனர். இந்த கொடூர தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பிளிங்கன் உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்தியாவும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் – பாலஸ்தீனத்துடன் அமெரிக்கா தொடர்ந்து பேச்சு

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் இடையே கடந்த சில நாள்களாக அதிகரித்து வரும் போா பதற்றத்தைத் தணிப்பதற்காக அந்தப் பிராந்தியத்தில் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சா ஆன்டனி பிளிங்கன், மேற்குக் கரையில் பாலஸ்தீன அதிபா மஹ்மூத் அப்பாஸை செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினாா்.

இஸ்ரேலில் அந்த நாட்டு பிரதமா பெஞ்சமின் நெதன்யாகுவை திங்கட்கிழமை சந்தித்துப் பேசியதற்குப் பிறகு, தற்போது அப்பாஸுடன் அவா ஆலோசனை நடத்தியுள்ளாா்.

பிளிங்கனின் இந்தப் பயணத்தின் நோக்கம் பதற்றத்தைத் தணிப்பது மட்டுமின்றி, சமாதானத்தை நோக்கி இரு தரப்பினரும் முன்னேறுவதற்கான அமெரிக்காவின் செயல்திட்டங்களை விளக்குவதுமாகும் என்று பிளிங்கன் கூறினாா். இஸ்ரேலும், பாலஸ்தீனமும் பொறுமை காக்க வேண்டும் என்று இரு தரப்பினரையும் அவா் கேட்டுக்கொண்டாா். இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்கும் பாலஸ்தீனாகளுக்கும் இடையே ஜனவரி மாதத் தொடக்கம் முதலே பதற்றம் நிலவி வந்தது.

அப்போது நடைபெற்ற சம்பவங்களில் 29 பாலஸ்தீனாகள் உயிரிழந்தனா. இந்த நிலையில், பாலஸ்தீனத்தின் மேற்குக் கரை பகுதியில் ஆயுதக் குழுவினரின் ஆதிக்கம் நிறைந்த ஜெனீன் அகதிகள் முகாமில் இஸ்ரேல் இராணுவத்தினா கடந்த வியாழக்கிழமை தேடுதல் நடத்தினா. இதில் 60 வயது பெண் உள்பட 9 போ உயிரிழந்தனா.

பதிலடியாக இஸ்ரேல் பகுதியில் யூத வழிபாட்டுத் தலம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 7 யூதா்கள் கொல்லப்பட்டனா். இதைத் தொடா்ந்து அந்தப் பகுதியில் போா்ப் பதற்றம் அதிகரித்து வருகின்றது. கடந்த 2008ஆம் ஆண்டுக்குப் பிறகு இஸ்ரேலில் நடத்தப்பட்டுள்ள மிக மோசமான தாக்குதல் இதுவாகும். அதிகரித்து வரும் பதற்றத்தைத் தணிப்பதற்காக, அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சா ஆன்டனி பிளிங்கன் அந்தப் பிராந்தியத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் பயணம் மேற்கொண்டு பல்வேறு தலைவாகளிடம் பேச்சுவாா்த்தை நடத்தியுள்ளாா்.

# உடனடியான மறுசீரமைப்புகளிலேயே பொருளாதார வளர்ச்சி தங்கியுள்ளது!

## சர்வதேச நிதியியல் ஒத்துழைப்பு அமைப்பு கருத்து

இலங்கையின் பொருளாதாரம் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சியைப்பதிவுசெய்யும்என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், அந்த வளர்ச்சி தற்போது உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களிலேயேதங்கியிருக்கின்றதுஎன்று சர்வதேச நிதியியல் ஒத்துழைப்பு அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வதிவிடப்பணிப்பாளர் அலெஜான்ரோ அல்வாரெஸ் டி லா காம்பா தெரிவித்துள்ளார்.

நாடுபாரியபொருளாதாரநெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வதிவிடப் பணிப்பாளராகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அலெஜான்ரோ அல்வாரெஸ் டி லா காம்பா மேலும் கூறியவை வருமாறு –

இலங்கை தற்போது அதன் வரலாற்றிலேயே மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. நுண்பாகப்பொருளாதார ரீதியில் நோக்குகையில் தற்போதைய நிலைவரம் மிகவும் சவால்மிக்கதாகவே காணப்படுகின்றது.

இப்போது உள்ள வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், எதிர்வரும் 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியைப் பதிவுசெய்யும். இருப்பினும் இந்த வளர்ச்சி தற்போது மேற்கொள்ளப்படவேண்டிய சில கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களிலேயே தங்கியிருக்கின்றது.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்படவுள்ள கடனுதவியைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய அவசியமான மறுசீரமைப்புக்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

அவற்றில் சில முக்கிய மறுசீரமைப்புக்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கின்றது. அந்த மறுசீரமைப்புக்கள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுவது இன்றியமையாததாகும்.

மேலும் வரிவருமானம் அதிகரிக்கப்படுவதை உள்ளடக்கிய இறைக்கொள்கை மறுசீரமைப்புக்கள், வெளிநாட்டுக் கையிருப்பை சாதகமான மட்டத்தில் பேணுதல், மின்சாரம் மற்றும் எரிபொருள் போன்ற சில பொருள்கள், சேவைகளுக்கு மீட்சிக்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய வகையில் விலைகளை நிர்ணயித்தல், சந்தையால் நிர்ணயிக்கப்படும் நாணயமாற்றுவிகிதம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும்.

தனியார்துறையின் ஊடாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் வேலைவாய்ப்புக்களும் ஊக்குவிக்கப்படாதவிடன் நாம் எதிர்பார்ப்பதுபோல் நாட்டின் பொருளாதார மீட்சியை விரைவுபடுத்த முடியாது.

அதேவேளை முதலாவதாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

அதன்படி அந்நிறுவனங்களின் செயற்திறனை அதிகரிப்பதுடன், அவற்றின் முகாமைத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே முன்னெடுத்து வருகின்றது. இரண்டாவதாக நிதியியல் துறையில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அதில் மத்திய வங்கியும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மத்திய வங்கிச்சட்டமும் முக்கிய பங்காற்றுகின்றன. மூன்றாவதாக தனியார் வர்த்தக செயற்பாடுகளும், நான்காவதாக அரச – தனியார் பங்குடைமைக் கட்டமைப்புக்களும் உரியவாறான மறுசீரமைப்புக்களுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

குறிப்பாக சக்திவலு, உட்கட்டமைப்பு, நீர்வழங்கல், சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் தனியாரின் வலுவான பங்களிப்பு மேலும் ஊக்குவிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

தெற்காசியப் பிராந்தியத்தைப் பொறுத்தமட்டிலே கடந்த 1991 - 1992 ஆம் ஆண்டளவிலே இந்தியா இதனையொத்த வெளிநாட்டுக் கையிருப்புப் பற்றாக்குறை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. அதேபோன்று இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளும் இத்தகைய நெருக்கடிக்கு முகங்கொடுத்தன.

அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வர்த்தகத்துறையைப் பன்முகப்படுத்தல், முதலீடுகளை ஒழுங்குபடுத்தல் என்பன உள்ளடங்கலாக அந்நாடுகளால் கையாளப்பட்ட உத்திகள் இலங்கைக்குப் பயனளிக்கக்கூடியனவாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# வெளியானது வர்த்தமானி

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தநிலையில், அதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதன்படி, குறித்த அதிவிசேட வர்த்தமானியில் தேர்தல் நடத்தப்படும் உள்ளூராட்சி சபைகளின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி, காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

339 உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலில் பதிவு செய்யப்பட்ட 58 அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 720 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# 50 % நீரிழிவு நோயாளர்கள் கண்டறியப்படவேயில்லை

## தொற்றுநோய் பிரிவு தெரிவிப்பு

இலங்கையில் 50 சதவீதமான நீரிழிவு நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது கண்டறிப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றாநோய் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சமிந்தி சமரகோன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிகழும் இறப்புகளில் 83 வீதமானவை தொற்றாநோய்களால் பதிவாகுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாத காரணத்தால் நோயாளர்களுக்கு சிறுநீரக நோய் அல்லது மாரடைப்பு ஏற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

சில நோயாளர்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர் எனவும் வைத்தியர் சமிந்தி சமரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.






# 13 இனங்களைப் பிளவுபடுத்தும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது!

## கம்மியூனிஸ்ட் கட்சியும் கருத்து



பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தால் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இனவாதம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தால் மீண்டும் தலைத்தூக்கிவிடுமோ என்ற அச்சம் காணப்படுகிறது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இனங்களைப் பிளவுப்படுத்துமே தவிர, நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது என இலங்கை கம்யூனிச கட்சியின் பதில் தலைவர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்துடன் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் அழிவுகள் தோற்றம் பெற்றன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகள் தோற்றம் பெறும் என்பதால் 1987 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்த அரச தலைவர்கள் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும், அதற்கு முழுமையான ஆதரவு வழங்குவோம். நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கத்தயாராக இருந்தேன்.

ஆனால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தடையாக இருந்தார்கள் என்றநிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவிக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராகத் தோற்றம் பெற்ற அரகலய நாட்டில் இனவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. தற்போது 13 ஆவது திருத்தம் மீண்டும் இனவாத முரண்பாடுகளைசமூகத்தின்மத்தியில்தோற்றுவிக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

தனது பதவிக் காலத்தில் இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிக்காமல் இருந்தாலேயே ஜனாதிபதி கௌரமான முறையில் பதவியில் இருந்து ஓய்வுப் பெறலாம். –என்றார்.

# பெக். 4 கரிநாள் முடிவுக்கு சிவில் அமைப்பு ஆதரவு

சிறீ லங்காவின் சுதந்திர தினமான பிப்ரவரி நாலாம் திகதியைக் கரி நாளாக பிரகடனப்படுத்தும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் முடிவுக்கு நாம் எமது ஆதரவை தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் அடையாளம் கொள்கை ஆய்வு நிலையம் ஆகிய சிவில் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

இது தொடர்பாக அவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உண்மையில் இத்தீவின் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்த் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை இத்தீவின் இன்னொரு தேசமாகிய பௌத்த சிங்கள தேசத்திடம் தாரை வார்த்த கரி நாளாகவே பிப்ரவரி நாலாம் திகதியை நாம் கருதுகின்றோம்.

1931ஆம் ஆண்டில் ஆங்கலேயரால் பொறுப்பாட்சி வழங்கப்பட்ட காலத்தில் இருந்து தொடங்கிய சிங்கள பௌத்த தேசத்தின் தமிழினத்தின் மேலான இனவழிப்பு நடவடிக்கைகள் 1948 பெப்ரவரி நாலாம் திகிதி முதல் முழு அதிகாரங்களுடன் தீவிரமடையத் தொடங்கியது.

இன்றுவரை இரண்டு லட்சத்துக்கும் மேலான தமிழ் மக்களைக் கொன்றும் பத்துஇலட்சத்திற்கும்அதிகமானவர்களைப் புலம்பெயர வைத்தும் பல்லாயிரம் தமிழர்களை காணாமல்போகச் செய்தும் பலநூறுதமிழர்களை பல்லாண்டுகளாகச் சிறைகளில் அடைத்தும் தமிழர்களின் தாயகத்தில் பல ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலங்களை குடியேற்றமுட்பட பலவழிகளிலும் அபகரித்தும் தமிழர்களின் பல ஆயிரம் கோடி செல்வங்களை அழித்தும் மட்டுமல்லாது தனிச் சிங்களச் சட்டம், கல்வியில் தரப்படுத்தல், வேலை வாய்ப்புகளில் பாரபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு என ஒரு நாடு என தாங்கள் கூறிக்கொள்ளும் இத்தீவில் தமிழர்களை தொடர்ச்சியாக ஓரம் கட்டியும் வந்துள்ளது சிங்கள பௌத்த தேசம்.

சிங்கள பௌத்த தேசம் இன்றும் அதேபாதையில்தான்தொடர்ந்துகொண்டு இருக்கின்றது.

ஆங்கிலேயர்வெளியேறிய பின்னான கடந்த 75 ஆண்டுகள் முழுவதும் தமிழின அழிப்பில் தனது பெருமளவு கவனத்தையும் பெரும்பாலான வளங்களையும் குவித்ததன் மூலம் எம்மை அழித்து பலவீனமாக்கியது மட்டுமல்லாது இன்று தானும் பொருளாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவற்றில் பேரழிவைச் சந்தித்து நிற்கின்றது, சிறீ லங்கா.

ஆனாலும் இந்த நிலையிலும் கூட, இன்றும் தமிழின அழிப்பிற்காக, தான் தேர்ந்த எந்தவொரு செயற்பாடுகளிலும் சிறீ லங்கா கிஞ்சித்தேனும் தளர்வை ஏற்படுத்தாமல் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

தொடர்ந்து வந்த சிறீலங்கா அரசுகள் காலங்காலமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம் எனக்கூறி பேச்சுக்களில் ஈடுபட்ட வண்ணம் எம்மை ஏமாற்றியது மட்டுமல்லாது, அக்காலங்களை தமிழர்களின் அடையாளங்களை அழிக்கவும் இனவழிப்புக்கு எதிரான எமது போராட்டங்களை வலுவிழக்கச் செய்வதற்கும் பயன்படுத்துவதை தனது தந்திரோபாயமாகவும் கொண்டுள்ளது. இன்று சிறீ லங்கா அரசு மீண்டும் ஒரு தடவை பேச்சு என்று இனவழிப்பைத் தொடர்வதற்கான கால அவகாசத்தை பெறுவதற்கும் ஈற்றில் எம்மை ஏமாற்றுவதற்கும் முயன்று நிற்கின்றது.

இந்நிலையில் சிறீலங்காவின சுதந்திர தினம் உண்மையில் தமிழர்களின கரி நாள் என்பதே தமிழ்த் தேசத்தின் யதார்த்த மாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்துள்ள இப்போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்து நிற்கின்றோம் – என்றுள்ளது.

## ஊடகவியலாளர் நிபோஜனுக்கு அஞ்சலி!

ஊடகவியலாளர் எஸ்.என்.நிபோஜனுக்குகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அஞ்சலி செலுத்தப் பட்டது.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் இந்த அஞ்சலி செலுத்தப்பட்டது. 2171ஆவது நாளாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் உறவினர்கள், தபாலகத்திற்கு அருகில் உள்ள தமது இடத்திலேயே இந்த அஞ்சலியைச் செலுத்தினர்.

இதன்போது அன்னாரின் உருவப்படத்துக்கு தீபமேற்றியும் பூக்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி ஊடகவியலாளரான எஸ். என். நிபோஜன் திங்கட் கிழமை தெஹிவளையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் உயிரிழந்தார்.

## மட்டக்களப்பிலும் நினைவஞ்சலி





(பழுவூரான்)

கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் எஸ்.என். நிபோஜனின் திடீர் இறப்பையொட்டி மட்டு.ஊடக அமையத்தில் இன்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

எஸ்.என்.நிபோஜனின் உருவப்படத்திற்கு ஊடகவியலாளர்கள் மலர் தூபி அஞ்சலி செலுத்தியதோடு, அகவணக்கமும் செலுத்தினர்.

### தமிழ் அரசுக் கட்சி பிரிந்து சென்றமை

# விடுதலைப் பயணத்தை மேலும் பின்தள்ளிவிட்டது

### இப்படிச் சொல்கிறார் சித்தார்த்தன்

தென்மராட்சி, ஜன. 01

தமிழர்களுடைய ஒற்றுமையைக் காண்பிக்க வேண்டிய தருணத்தில் தமிழ் அரசுக் கட்சி தன்னித்துச் சென்றிருப்பது எமதுமக்களுக்கானவிடுதலைப் பயணத்தை மேலும் பின்தள்ளியிருக்கிறது என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடைய ஒற்றுமையின் சின்னமாக வீடு திகழ வேண்டும் என்ற நோக்குடனேயே விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரன் உதயசூரியன் சின்னத்திற்குப் பின்னர் வீட்டுச் சின்னத்தை கூட்டமைப்பின் சின்னமாகத் தேர்ந்தெடுத்திருந்தார்.

அப்படியான எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட சின்னத்தை உடைத்து தமிழ் அரசுக் கட்சி தனியாகப் பிரிந்து சென்றுள்ளது. இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகவே பார்க்கப்படுகிறது.



இந்தக்காலகட்டத்தில் விரும்பியோ–விரும்பாமலோ அரசுடன்பேச்சுஎன்ற ஒன்று இடம்பெறுகிறது. சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக அரசு பேச முன்வரு கிறது. அதற்கு நாம் ஒற்றுமையாக முகம் கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் இன்று நாம் எமக்குள் உடைந்து பேச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் நிற்கிறோம்.

இது தமிழ் மக்களுக்கான விடுதலைப் பாதையை மேலும் பின்னுக்கு கொண்டு செல்கிறது. இருந்தாலும் நாம் 5 கட்சிகளாக சேர்ந்து மீண்டும் எழுந்து நிற்கிறோம். நாம் எல்லோருமே போராளிகள் கட்சி தான். விடுதலைப் புலிகள்அமைப்பைச்சேர்ந்தவர்களும் எம்மோடு இணைந்திருப்பது எமக்கு கிடைத்துள்ள பலம் – என்று தெரிவித்தார்

# தொடர்ந்து நான்காவது மாதமாக நாட்டின் பணவீக்கம் குறைந்தது!

இலங்கை பணவீக்க விகிதம் கடந்த ஆண்டு டிசெம்பரில் 57.2 வீதமாக இருந்ததை ஒப்பிடுகையில் 2023 ஜனவரியில் 54.2 வீதமாக குறைந்துள்ளதாக புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்புநுகர்வோர் விலைச் சுட்டெண் உணவுப் பொருள் களின் விலையில் ஒரு வருடத்துக்கு முந்தைய வருடத்தை விட 60.1 வீதம் உயர்வை பிரதிபலித்துள்ளது.

2023 ஜனவரி மாதத்துக்கான அனைத்து பொருட்களுக்கான சி.சி.பி.ஐ 24..3 ஆக இருந்தது மற்றும் குறியீட்டு புள்ளிகளில் 1.1 அதிகரிப்பைப் பதிவு செய்தது.

மின்சார விலையில் அதிகரிப்பு இல்லை என்றால், அடுத்த மாதம் பணவீக்கம் 51.9 வீதம் ஆகவும் மார்ச் மாதத்துக்குள் 50 வீதத்துக்கும் குறைவாகவும் இருக்கும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# 'டெஸ்ட்' கிரிக்கெட்டினது எதிர்காலம் பற்றி கவலை

## ஆஸி. வீரர் டேவிட் வார்னர் வெளிப்படுத்தினார்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் எதிர்காலம் குறித்துத் தான் கவலை கொண்டுள்ளார் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வார்னர் கூறினார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட டேவிட் வார்னர் தெரிவித்ததாவது:

அடுத்த ஐந்து முதல் 10 ஆண்டுகளில் என்ன நடக்கும்? கிரிக்கெட் எந்தத் திசையில் செல்லும் என் பதை நினைத்தால் எனக்குக் கொஞ்சம் கவலை ஏற்படுகிறது. டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட ஆர்வமாக இருக்கும் வீரர்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறேன். அந்தப் பெருமிதம்தான் உங்கள் வாழ்க்கையில் முக்கியமானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவது அற்புதமானது. டெஸ்ட் போட்டிகள் உங்கள் கிரிக்கெட் திறமையை நன்கு பரிசோதிக்கக் கூடியதாக இருக்கும். கிரிக்கெட் ஜாம்பவான்களுடன் உங்களை ஒப்பிட்டுக்கொள்ளவும் அந்த டெஸ்ட் போட்டிகள் வாய்ப்பை உருவாக்கும்.

ஆஸ்திரேலிய அணிக்காக விளையாட எண்ணினால் அதற்கேற்ப நமது திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும். தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவிக்கவேண்டும். சிட்னி தண்டர் அணி வீரர் டேவீஸிடம் அண்மையில் நான் பேசிக்கொண்டிருந்தேன். அவர் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் (ஒருநாள், டி20) விளையாடுவதற்கு ஆர்வமாக உள்ளார். அவர் இப்போதைக்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவது போலத் தெரியவில்லை. டெஸ்ட் போட்டிகளில் விளையாடாமல் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் மட்டும் விளையாடியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது.

உலகம் முழுவதும் நடைபெறும் ரி20 லீக் போட்டிகளில் பங்கேற் பதற்குத்தான் பலருக்கும் ஆர்வம் உள்ளது. ரி20 போட்டிகளில் விளையாட நினைக்கும் வீரர்கள், டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பதற்கும் தயாராக இருக்கவேண்டும்- இவ்வாறு அவர் பேசினார்.



# ஸ்டாக் விலகல்

இந்தியாவுடனான கிரிக்கெட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியிலிருந்து ஆஸ்திரேலிய அணி வீரர் மிட்செல் ஸ்டார்க் காயம் காரணமாக விலகியுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் 4 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி வரும் 9ஆம் திகதி நாக்பூரில் தொடங்குகிறது. இந்த நிலையில் கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இருந்து விலகி உள்ளார் என்று கிரிக்கெட் ஆஸ்திரேலியா (சிஏ) அமைப்பு தெரிவித்துள்ளது.

விரலில் ஏற்பட்ட காயத்தில் இருந்து ஸ்டார்க், மீண்டு வருவதால் இந்தியாவுக்கு எதிரான தொடக்க டெஸ்ட் போட்டியில் இருந்து மட்டும் விலகுவதாக மிட்செல் ஸ்டார்க் தெரிவித்துள்ளார்.

"இந்தியா செல்லும் ஆஸ்திரேலிய அணி நல்ல நிலையில் உள்ளது. அங்கு பல போட்டிகளில் விளையாடவுள்ளோம். அடுத்த இரண்டு மாதங்களில் நிறைய நல்ல கிரிக்கெட்டை பார்க்கலாம். விரைவில் காயத்திலிருந்து குணமடைவேன் என்று நம்புகிறேன். எஞ்சியுள்ள தொடரில் நான் விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார்.

# மரடோனாவிடமிருந்து மெஸ்ஸி பெற விரும்பிய உலக கோப்பை

## வானொலி பேட்டியில் அவரே தெரிவிப்பு



மரடோனா உயிருடன் இருந்திருந்தால் அவரிடமிருந்து கால்பந்து உலகக் கோப்பையை பெற தான் விரும்பினார் என அர்ஜென்டினா அணியின் விரர் மெஸ்ஸி தெரிவித்துள்ளார். இதை வானொலி நிகழ்ச்சி ஒன்றில் மெஸ்ஸி பகிர்ந்துள்ளார்.

கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவான்களாக மெஸ்ஸியும், மரடோனாவும் அறியப்படுகிறார்கள். இருவரும் அர்ஜென்டினாவுக்காக உலகக் கோப்பையை வென்று கொடுத்தவர்கள்.

2020 நவம்பரில் மரடோனா மறைந்தார். அர்ஜென்டினாவுக்காக 1977 முதல் 1994 வரையில் சர்வதேச அளவில் 91போட்டிகளில் விளையாடிவர் மரடோனா. அதன் மூலம் தன் நாட்டுக்காக அவர் பதிவு செய்த மொத்த கோல்களின் எண்ணிக்கை 34. மரடோனா உயிருடன் இருந்திருந்தால் அவரது கைகளால் உலகக் கோப்பையை பெறநான் விரும்பி இருப்பேன். அது நடக்காமல் போயிருந்தால் குறைந்தபட்சம் அவர் இந்த காட்சியையாவது பார்த்திருப்பார் என்றுமகிழ்ந்திருப்பேன். அவரும், என்மீது நேசம் கொண்டவர்கள் பலரும் விண்ணிலிருந்து எனது அனைத்துக்குமான உந்து சக்தியாக இருக்கிறார்கள்.

நெதர்லாந்து அணிக்கு எதிராக நான் அப்படிச் செய்திருக்கக்கூடாது. அதை நான் விரும்பவும் இல்லை. அதற்கு பிறகு நடந்தவற்றையும் நான் விரும்பவில்லை. இருந்தாலும் அந்த தருணத்தில் நடந்தது அது. பதற்றம் நிறைந்த அந்த நேரத்தில் அனைத்தும் வேகமாக நடந்தது. இதில் எந்த திட்டமும் இல்லை என மெஸ்ஸி தெரிவித்தார்.

கட்டாரில் நடைபெற்ற உலகக் கோப்பை தொடரில் அர்ஜென்டினா மற்றும் நெதர்லாந்து அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் அர்ஜென்டினா அணி சமநிலை தகர்ப்பு உதை (பெனால்டி ஷூட்) முறையில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டிக்கு முன்னதாக நெதர்லாந்து அணியின் பயிற்சியாளர் எதிரணியைக் காட்டிலும் தங்கள் அணி வீரர்கள் தகர்ப்பு உரைக்குத் தயார் நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தார்.

அதை கருத்தில் கொண்டே ஆட்டத்தில் வெற்றி பெற்ற பிறகு நெதர்லாந்து அணி பயிற்சியாளரை நோக்கி சைகையால் சேட்டை செய்திருந்தார் மெஸ்ஸி. அதைதான் இப்போது நினைவு கூர்ந்துள்ளார்.

அந்தப் போட்டி முடிந்ததும் நெதர்லாந்து பயிற்சியாளருக்கு அருகில் சென்று விரல்களைக் கொண்டும் சில சைகைகளும் செய்திருந்தார் மெஸ்ஸி. அப்போது அவர் களத்தில் மிகவும் ஆக்ரோஷமாக இருந்தார்.

# இந்திய ஆர்சிபி அணியே இன்ஸ்டாவில் பிரபலம்

இன்ஸ்டாகிராம் தளத்தில் மிகவும் பிரபலமான உலகின் டாப் 5 அணிகளில் ஒன்றாக அறியப்படுகிறது ஐபிஎல் அணிகளில் ஒன்றான ரோயல் சலஞ் சேர்ஸ்பெங்களூர் (ஆர்சிபி). மற்ற நான்கு இடங்களை கால்பந்தாட்ட கிளப் அணிகள்தான் பிடித்துள்ளன.

இந்திய அளவில் இன்ஸ்டாகிராம் தளத்தில் மிகவும் பிரபலமான அணியாக ஆர்சிபி உள்ளது. இந்த சமூக வலைதளத்தில் அதிக இன்ட்ரேக்ஷனை பெற்றுள்ள முதல் 5 அணிகளில் இடம் பிடித்துள்ள ஒரே இந்திய அணியும் ஆர்சிபிதான்.

உலக அளவில் இன்ஸ்டாவில் பிரபலமான கிரிக்கெட் அணியாகவும் அது அறியப்படுகிறது. சமூக ஊடக அனாலிட்டிக்ஸ் நிறுவனம் நடத்திய சர்வேயில் இது தெரியவந்துள்ளது. ஆர்சிபி அணி இன்ஸ்டாகிராம் தளத்தில் சுமார் 948 மில்லியன் இன்ட்ரேக்ஷனை கொண்டுள்ளது.

இதற்குக் காரணம் அந்த அணிக்காக கடந்த 15 ஆண்டுகளாக விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி என்றும் தொடர்ந்து விளையாடி வரும் இந்திய அணி வீரராக கோலி திகழ்கிறார். அந்த அணியின் ரசிகர் படைக்கு அவர்தான் தளபதி என தெரிகிறது.

இன்ஸ்டாகிராம் தளத்தில் கோலியை சுமார் 234 மில்லியன் பேர் பின்தொடர்கிறார்கள். அவரது இருப்புதான் ஆர்சிபி அணி இன்ஸ்டாவில் மிகவும் பிரபலமாக இருக்க காரணமாம். கிறிஸ்கெயில், டிவில்லியர்ஸ் போன்ற நட்சத்திர வீரர்கள் இதற்கு மற்றொரு காரணம் எனச் சொல்லப்படுகிறது.

மகளிர் ப்ரீமியர் லீக் தொடரிலும் தனது மகளிர் அணியைக் களமிக்கவுள்ளது ஆர்சிபி. அதனால் இன்ஸ்டாவில் மேலும் பிரபலம்



முறை ஐபிஎல் இறுதிப் போட்டியில் விளையாடி

# பிம்ஸ்டெக் தொழிநுட்ப பரிமாற்ற வசதிகளை ஸ்தாபிக்கும் உடன்படிக்கைக்கு அங்கீகாரம்

பிம்ஸ்டெக் சமவாயம் மற்றும் பல்துறை தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்களுக்கான வங்காளவிரி குடா நாடுகளின் அமைப்பு தொழிநுட்பப் பரிமாற்ற வசதிகளைத் ஸ்தாபித்தல் தொடர்பான ஒத்துழைப்பு உடன்படிக் கையை எட்டுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பிம்ஸ்டெக் சமவாயம் மற்றும் பல்துறை தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்களுக்கான வங்காள விரிகுடா நாடுகளின் அமைப்பு தொழி நுட்பப் பரிமாற்ற வசதிகளை ஸ்தாபித்தல் தொடர்பான ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கடந்த ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி இலங்கை அரசு கையொப்பமிட்டுள்ளது.

மேற்படி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையை ஏற்று அங்கீகரிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பாடசாலைகளின் சீருடை தேவையில் 70 வீதத்தை சீனா பூர்த்தி செய்தது!

### கல்வி அமைச்சர் சுசில் தகவல்

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை தேவையில் 70 வீதம் சீனா பூர்த்தி செய் துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், இந்த நன்கொடை யின் முதலாவது தொகுதி வந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுடன் கல்வியின் தரமும் மேம்பட வேண்டும் என அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதற்கான நடைமுறைத் திட்டங்களை அறி முகப்படுத்தி மாண வர்களிடம் ஒழுக்கம் மற்றும் நெறி முறைகளை புகுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பிணையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்பாளரும்காலிமுகத்திடல் போராட்டத்தின் ஏற்பாட்டாளருமான வசந்த முதலிகேபிணையில்விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராகக் கொழும்பு கோட்டை நீதிவான்நீதிமன்றத்தில்முன்னெடுக்கப்பட்ட மூன்று வழக்குகளிலும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்குகள் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தப் பிணை உத்தரவு வழங்கப்பட்டது என்று சட்டத்தரணிநுவான்போப்பகேதெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவசந்த முதலிகே, அந்த வழக்கிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நிலுவையிலிருந்த மேலும் 3 வழக்குகளில் வசந்த முதலிகேவுக்கு இன்று பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

## சிங்களவர்களு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சருமான பொ. ஐங்கரநேசன். உணவின்றித் தவித்துக் கொண்டிருக்கும் சிங்கள மக்களை பற்றி சிந்திக்காது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமெடுப்பில் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்குத் தயாராகி வருகின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழர் தேசத்தை ஒற்றையாட்சி என்ற சிறைக்குள் வலுக்கட்டாயமாக முடக்கி வைத்திருக்கும் அரசியலமைப்பில் இலங்கையின் சுதந்திர நாளை தமிழர்களால் ஒருபோதும் கொண்டாட இயலாது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ள தன்சானியா நாடு அண்மையில் தனது சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நிறுத்திவிட்டது. கொண்டாட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியைமாற்றுத்திறன்மாணவர்களுக்கான தங்கும் இல்லங்களை அமைப்பதற்குப் பயன்படுத்துமாறு அந்த நாட்டின் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். தன்சானியாவிட மிகவும் மோசமான பொருளாதாரச் சீரழிவுக்குள் சிக்கியுள்ள இலங்கையில், உணவின்றித் தவிக்கும் தன் சிங்கள மக்களைப்பற்றியேனும் சிந்திப்பவராக ஜனாதிபதி இல்லை.

இலங்கைத் தீவின் பொருளாதாரம் இன்று மீண்டெழ முடியாத படுகுழிக்குள் வீழ்ந்து கிடப்பதற்குத் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் தேசத்தின் மீது தொடுத்து வந்த போரே முதன்மைக் காரணி.

இதற்கு வித்திட்டது பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தை நிறுவுகின்ற இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு முறைமையே.

இவ்வாறு ஐங்கரநேசன் மேலும் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் சிறிலங்கா விஜயத்தின் போது இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்து வலியுறுத்தியிருந்தது.

இந்நிலையில், இந்தியாவிற்கான சிறிலங்கா உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவை ஜெய்சங்கர் சந்தித்து சிறிலங்கா அரசாங்கத்தின் புரிந்துணர்வு தொடர்பில் கேட்டறிந்துகொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இந்தியாவிற்கான சிறிலங்கா உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் இருதரப்பு உறவுகள் மற்றும் தற்போதைய நிலை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது ஜெய்சங்கரின் சமீபத்திய சிறிலங்காவிற்கான விஜயத்தின் நோக்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி சிறிலங்காவிற்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கையிலுள்ள இனப்பிரச்சனைக்கு தீர்வு வழங்கும் வகையில் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து வலியுறுத்தியிருந்தார்.

சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்தன உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது

## அம்பாறையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரைக்குமான கரையோர பிரதேசங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. மாலை வேளையில் கடும் குளிரான காற்றும் வீசி வருகிறது. இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் காலநிலை மாற்றம் காரணமாக முதியோர் மற்றும் சிறுவர்கள் அதிக அளவில் சிரமங்களை எதிர்போக்குவதுடன் பலர் சுவாச நோய்க்கும் உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மழை காரணமாக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. நாளாந்த கூலி வேலைக்குச் செல்பவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.




## 2 பெண்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்பிட்டியப் பொலிஸாருக்கு இன்று கிடைத்த தகவலின் பிரகாரம் இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

70 வயதுக்கும் 80 வயதுக்கும் இடைப்பட்ட இரண்டு பெண்களே உயிரிழந்துள்ளனர்.

மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வரிக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக முன்றலில் நண்பகல் 12 மணியளவில் கூடிய அவர்கள் வரிக் கொள்கைக்கு எதிராகக் குரல் எழுப்பினர். அநீதியான வரிவிதிப்பை நிறுத்து, அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கிறது, பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி எங்களிடம் கேட்பது அநீதி போன்ற பதாகைகளை ஏந்தியாவாறு விரிவுரையாளர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## இந்தியப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர்.

வழக்கினை ஆராய்ந்த நீதிவான் மார்ச் மாதம் முதலாம் திகதி கட்டளைக்காக வழக்கை ஒத்திவைத்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2023 இல் வெளியிடப்பெற்றது.